# திராவிடநாடு

10-4-60 | வார வெளியீடு | விலை 16 காசு

# கேளுங்கள் பதில் சொல்வர்!

—[பெ. அ. இளஞ்செழியன்]—

குமரிப்பெண் 'காவேரி' இருக்கும் போது
'குஜராத்திப்' பெண்ணெதற்கு நமக்கு? தெற்கைச்
சுமக்கின்ற பொறுப்பதனை வடக்கு நாடு
சுமப்பதனால் நமக்கென்ன லாபம்? நித்தம்
நமைக்கொண்டு வடநாடு கொழுப்ப தற்கோ
நாமவர்க்கு அடிமைகளாய் இருக்க-வேண்டும்?
இமயத்தின் உச்சிதனை வென்றோம் என்றால்
ஏன் இந்தக் குகைவாழ்வு? எச்சில் வாழ்வு?

வாடாத புகழ்படைத்த மன்னர் கூட்டம்
வாழ்ந்ததமிழ் நாட்டினிலே வடவராதிக்கம்
நீடித்து இருப்பதுவும் ஒழுங்கா? இந்த
நிலைத்தாழ்வு தான்வாழ்வா? உழைத்த மக்கள்
ஓடாகத் தேய்ந்துஉடல் வற்றி நாளும்
உயிரோடு போராடல் சரியா? சொந்த
நாடடைந்து கேடகன்று வாழ்வ தெந்நாள்?
நலிந்தஉடல் வலிவடைந்து மீள்வ தெந்நாள்?

கிடைக்கிறது நம்நாட்டில் தங்கம்; ஆனால்
கிடைக்கிறதா நமக்கென்றால் இல்லை! முத்து
கிடைக்கிறதா நம்நாட்டில் என்றால் ஆமாம்
கிடைக்கிறது; நமக்கில்லை! கறுப்புத் தங்கம்
கிடைப்பதுண்டா இந்நாட்டில்? உண்டு; ஆனால்
கிடைப்பதில்லை நமக்கொன்றும் கிடைப்பதில்லை!
கிடைப்பதெல்லாம் டில்லிக்கு!! எல்லாம் நீங்கள்
கேளுங்கள் பதில்சொல்வர் கணம்கள்!

# மூன்ருவது "இரயிலி"லும் இடமில்லை!

புதுடில்லி மத்திய இரயில் நிலையம்; மூன்ருவது ஐந்தாண்டுத்திட்டம் என்ற இரயில் பல பெட்டிகளுடன் நிற்கிறது. பீகாரும், வங்காளமும், ஒரிசாவும், அஸ்ஸாமும், மத்தியப் பிரதேசமும் பம்பாயும் ஒவ்வொரு பெட்டியிலும் இடம்பிடித்துக்கொண்டு தாராளமாகத் தலைசாய்த்துப் படுத்து வசதியை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன. திட்டக்கமிஷன்என்கிற என்ஜின் புறப்படுவதற்குத் தயாராக நிற்கிறது. அமைச்சர் ஜகஜீவன்ராம் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் அலைந்துகொண்டு பெட்டிகளைச் சரிபார்த்துக்கொண்டிருக்கிருர். நேரம் வந்தாயிற்று. ஜகஜீவன்ராம் பச்சைக்கொடி காட்டுகிருர். மூன்ருவது ஐந்தாண்டுத்திட்டம் என்கிற இரயிலைத் திட்டக்கமிஷன் என்கிற என்ஜின் இழுத்துக்கொண்டு புறப்படுகிறது. அவசர அவசரமாக அப்போதுதான் சென்னையும் ஆந்திரமும், கேரளமும் கன்னடமும் ஓடிவருகின்றன--ஐந்தாண்டுத் திட்டம் என்கிற அந்த இரயிலைப் பிடிக்க. இனி யாரையும் ஏற்றுகிற நிலையில் இல்லை என்ற பொருளில் திட்டக்கமிஷன் என்கிற என்ஜின் வந்த மாகாணங்களையும் கவனிக்காமல் ஓட்டத்தில் துரிதம் காட்ட முயலுகிறது. அதைக்கண்ட கொடிகாட்டும் ஜகஜீவன்ராமும் 'ஆமாம்' என்பதுபோல் பச்சைக் கொடியை இன்னும் பலமுறை ஆட்டிவிட்டு, இரயிலில் இடம் கிடைக்காமல் நிற்கும் நான்கு மாகாணங்களையும் இரக்கமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு ஓடும் வண்டியினுள் சென்று அமர்ந்துவிடுகிருர். ஆந்திரமும், கேரளமும், கன்னடமும் பலவந்தமாகவாவது இரயிலை ஓடிப் பிடித்துவிடலாமா என்ற சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டுவிட்ட சென்னையோ அவை மூன்றையும் பிடித்திழுத்து நிறுத்தி "இது இல்லாவிட்டால் அடுத்த 'இரயில்' நில்லுங்கள் மெதுவாகப் போய்க்கொள்ளலாம்" என்ற பாவனையில் கேட்டுக்கொள்கிறது. திட்டக் கமிஷன் என்கிற என்ஜின் கக்கிவிட்டுப்போன கரித் தூள்கள் அந்த நான்கு மாகாணங்களின்கண்களில் வந்துவிழுகிறது. "இரயில் பயணமும் இப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது என்று சென்னை அதைப்பார்த்து ஆனந்திக்க, ஆந்திரமும், கேரளமும், கன்னடமும் கண்களைக் கசக்க இதையெல்லாம் பார்த்து, இரயிலில் இடம்பிடித்துவிட்ட மகிழ்ச்சியில் இருந்தபீகாரும்,வங்காளமும்ஒரிசாவும் எள்ளிநகையாட, திட்டக்கமிஷன், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் என்கிற இரயிலை இழுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றது.

*

மேற்கண்ட காட்சிதான் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 'புதிய இரயில்பாதை போடுவது'

**அன்பு**

என்ற பிரச்சினையில், திட்டக்கமிஷன், இரயில்வேதுறை, தென்னிந்திய மாகாணங்கள் ஆகிய மூன்று பேர்களுக்குள்ளாக நடந்த திரை மறைவு நாடகம்.

சில நாட்களுக்குமுன், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னக மாகாணங்கள், புதிய இரயில்பாதை போடும் பிரச்சினையில் புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலையைவிளக்கி 'இந்து'ப்பத்திரிகையின் புதுடில்லி நிருபர் எழுதியிருந்த ஒரு செய்திக் கடிதத்தை அந்த இதழ் பிரசுரித்திருந்தது.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் போடப்பட்ட இரயில் பாதைகள்—புதிய பாதைகள் போடுவதில் திட்டக்கமிஷன் தந்த யோசனைகள் — அதை இரயில்வேதுறை ஏற்றுக்கொண்ட தன் அளவு--திட்டங்களை நிறைவேற்றுவதில் திட்டக்கமிஷனுக்கும் இரயில்வேத் துறைக்கும் இருந்துவந்திருக்கிற கருத்து வேறுபாடுகள் --அதையும்மீறி இரயில்வேத்துறை தன் விருப்பப்படி நிறைவேற்றியிருக்கும் திட்டங்கள்—நாட்டு அபிவிருத்தியில் தேசிய வளர்ச்சிக் குழுவின் சிபார்சுகள்—அதன்படி நிறைவேறியிருக்கும் செயல்கள்—இத்தனைக்குப் பின்னும் தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கும் தன்மை—அதற்கான காரணம் ஆகிய எல்லாவற்றினையும் விளக்கி எழுதியிருந்த அந்த நிருபரின் கடிதம், மறுத்துரைக்க முடியாத புள்ளிவிவரங்களுடனும், ஆணித்திறமானவாதங்களுடனும் அமைந்திருந்தது. அக்கடிதத்துக்கு 'இந்து' நாளிதழ் முக்கியத்துவம் கொடுத்துப்பிரசுரத்திருந்ததன்மை கடிதத்தின் பொருளை இன்னும் வலிவாக்கியதாயிருந்தது.

சில கிழமைகளுக்கு முன்புதோன்றிய தேசிய அபிவிருத்திக் குழுவின் ஒரு கூட்டம் டில்லியில் கூடிக் கலைந்தது. தொழில்கள் நாட்டின் ஒரே மூலையில் ஒரே அடிப்படையில் அமையாமல், பல பாகங்களிலும், பல முறைகளில் அமைக்கப்பட வேண்டும்; அப்போதுதான் பொதுப்படையான முன்னேற்றம் காணலாம்—என்ற ஒரு சிபாரிசை அப்போது அக்குழு வெளியிட்டது. ஆனல் புதிய இரயில் பாதைகளைப் போடுவதே இந்த அடிப்படையில் அமையவில்லை என்பது இப்போது இரயில்வேத்துறையினருக்கும் மாநில அமைச்சர்களுக்கும் இடையே நடந்து முடிந்த ஒரு கூட்டத்தினின்றும் தெரிகிறது. புதிய இரயில் பாதைகள், பகுதிகளின் தேவைக்கேற்பவும், குறிப்பிட்ட வட்டாரங்களில் அமைந்து கிடக்கும் தொழில் வளர்ச்சிக்கும் தக்கவாறு போடப்படுகிறதா, அல்லது செல்வாக்குள்ள மாநிலங்கள் கேட்கும் தோரணையில் போடப்படுகிறதா என்பது அக் கூட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட மாநிலங்களின் வினக்குறியாக இருந்ததாம். தேவை இருந்ததோ இல்லையோ, வசதி கிடைத்ததோ கிடைக்கவில்லையோ, ஆனல் புதிய இரயில் பாதைகள் மட்டும் உடனுக்குடன் போடப்பட்டிருக்கிறதாம் பீகார் வங்காளம், ஒரிசா போன்ற மாகாணங்களில்.

காங்கிரசுக்காரர்களுக்குள் நடக்கும் திரை மறைவு நாடகத்தில் வழங்கும் வசனத்திற்கேற்ப இவைகளெல்லாம் செல்வாக்குள்ள மாநிலங்கள்.

இதுபோல், எந்த ஒரு அவசரத் தேவையோ, இலாபகரமான பலனுமோ இல்லாமல், தங்களுக்

(13-ம் பக்கம் பார்க்க)

# நாம் அன்று சொன்னதை....!

மலர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (10—4—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 39

"நான் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று—எனது கட்சியினரில் பெரும்பான்மையினரும் வெற்றிபெற்று—சர்க்காரை நடாத்திச் செல்லும் பொறுப்பு எங்களுக்குக் கிடைத்து — நானே முதலமைச்சராகவும் ஆக்கப்பட்டுவிட்டால், என்னுடைய முதல் வேலை சென்னை மாநிலத்தில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்குவதுதான்"

என்று 1937-ல் காங்கிரசார் தேர்தல் பிரச்சாரம் நடாத்தியபோது, அன்பர் ஆச்சாரியார் முழக்கமிட்டார்.

தேர்தலில் காங்கிரசாரே வெற்றிபெற்றனர். ஆச்சாரியாரே முதலமைச்சரானார். ஆனவுடன், இந்தி இம்மாநிலத்தில் கட்டாயபாடம். எனவே தமிழ் மக்கள் எல்லோரும் இந்தி படித்தாக வேண்டும் என்று ஆச்சாரியார் அறிவித்தார் — இல்லை — ஆணையிட்டார்.

ஆனால், தமிழ்ப் பெருங்குடி மக்கள் இந்தத் தகாத—வேண்டப்படாத—விரும்பப்படாத—தேவையற்ற—அடாத செயலை ஒருமுகமாக நின்று எதிர்த்தனர். எதிர்ப்புக்கு மதிப்பளிக்காத ஆச்சாரியார் அடக்குமுறையை அவிழ்த்துவிடலானார். அதனால் ஆயிரத்து மேற்பட்டவர்கள் சிறைக்கூடம் புகுந்தனர். இரு இளைஞர்—தாலமுத்து, நடராசன் உயிர் துறந்தனர்.

"குழந்தைகளுக்குப் பால் கிடைக்கவில்லைப் போலும், அதனால்தான் பெண்கள்கூடச் சிலர் சிறைக்கூடத்தில் பால் நிறையக் கிடைக்கும் என்று, தங்கள் குழந்தைகளுடன் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுச் சிறைசெல்கிறார்கள்"

என்று நையாண்டியாகப் பேசினார் ஆச்சாரியார்.

பொறுமையையே அணிகலனாகக்கொண்ட தமிழ் மக்கள் ஆச்சாரியாரின் அடக்கு முறையையும் நையாண்டியையும் தங்கள் வெற்றிக்கு இவை வழி கோலுபவை என்ற எண்ணத்தோடு பணியாற்றினர்.

இந்த நிலையில் காங்கிரஸ் சர்க்கார், அதாவது ஆச்சாரியாரின் அமைச்சரவைக்குப் பதவியில் இருந்து விலகும் பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டது. பிறகு கவர்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

தமிழ்ப்பெரு மக்களின் அறப்போர் வெற்றி பெற்றது—கட்டாய இந்தி கைவிடப்பட்டது. விருப்ப பாடம் என்ற நிலை ஏற்பட்டது. இது கிடக்கட்டும். இவை எல்லாம் பழங்கதைகள். இருபத்திரண்டு ஆண்டுகட்கு முற்பட்ட நிகழ்ச்சிகள்.

ஆனால், இன்றைய நிலை என்ன? யார் இந்த இந்தித் திணிப்பில் தீவிரமாகப்பங்கெடுத்துப் பணியாற்றினாரோ, அவரே இன்று இந்தி இந்நாட்டின் பொது மொழியாகும் வாய்ப்பைச் சிறிதும் பெறாதது. இந்தி இந்நாட்டின் பொதுமொழியாக ஆக்கப்படுமானால் அதனால் விளையும் கேடுகள் அளவற்றன என்று எச்சரிக்கை விடுமளவுக்கு இறங்கிவந்துள்ளார். இது மட்டுமல்ல, எந்தக் கட்சியின் ஆணிவேர்களில் ஒன்றாக நின்று அதனை ஆட அசையவிடாது காத்துக் கிடந்தாரோ, அந்தக் கட்சி வளர்வது நாட்டுக்குப் பேராபத்தை உண்டாக்குவதாகும்; ஆகையினால், அது வளர்வதற்கு ஆணிவேராக நிற்கக்கூடாது என்று முடிவுசெய்து, இப்போது வேறொரு மரத்தி (கட்சியி)ன் ஆணிவேராக அன்பர் ஆச்சாரியார் அமைந்து அந்தக் கட்சிதான் நாட்டின் நலனைக் காத்துப் பேணவல்லது என்ற போக்கில் பணியாற்றி வருகிறார். போகட்டும், அவருடைய ஆசையில் நாமேன் குறுக்கே நிற்கவேண்டும்.

இப்போது, ஆச்சாரியார் தம்முடைய கட்சியை வளர்ப்பதில் பெரிதும் முனைந்து மின்னல் விரைவுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இந்த உபகண்டம் முழுவதும் உலாவருகிறார். தம்முடைய கட்சிக்கு ஏற்படுத்தியுள்ள இருபத்தொரு திட்டங்களையும் விளக்கி வருகிறார். வடக்கே, பாம்பே, பாட்னா, லக்னோ, காசி முதலான ஊர்களுக்கெல்லாம் சென்று கட்சிவளர்க்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால், அங்குள்ளவர்கள், "யார் இவர்? என்ன பேசுகிறார்? எந்த மொழியில் பேசுகிறார்? ஏன் எங்கள் மொழியில் பேசக்கூடாதா?" என்று எண்ணுகிறார்கள். உடனே, ஐயா

பிரசங்கியாரே! நீர் எதுவேண்டுமானாலும் பேசும். ஆனால், பேசுவதை எங்கள் மொழியில்—இந்திமொழியில் பேசும்" என்று பெரும் ஆரவாரம் செய்கிறார்கள். சில ஊர்களில் கூட்டம் குழப்பத்தில் முடிகிறது; சில ஊர்களில் கூட்டமே நடத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

அன்பர் ஆச்சாரியாரோ, "எனக்கு இந்தி தெரியாதே! எப்படி நான் இந்தியில் பேசுவேன்" என்று பரிதாபகரமாகப் பதில் கூறுகிறார்.

பாராளுமன்றம் வரை அவருடைய பரிதாபகரம் சென்றுவிடுகிறது. உள்நாட்டமைச்சர் பந்த் அவர்கள் "மதிப்பிற்குரிய ஒரு தலைவருக்கு இப்படியா மரியாதை காட்டுவது" என்று உளம்நொந்து பேசுகிறார். நாமும் தான் அவர் நிலைகண்டு வருந்துகிறோம். ஆழம் தெரியாமல் காலை விடுவானேன், அவதிப்படுவானேன், என்று ஆயாசப்படுகிறோம்.

வட இந்தியர்கள் ஆச்சாரியாரை அவமதித்தது குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால், வட இந்தியர்கள் தென்னாட்டவரை மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை நாம் பலகாலமாகவே கூறி வருகிறோம். ஆனால் இப்போது இங்குள்ள சிலருக்கு இந்த உண்மை புரியத்தொடங்கியிருக்கிறது ஒரு கட்சித் தலைவரை இப்படியெல்லாம் இழிவாக நடத்துவது தகாத செயல் என்று கண்டிக்க முன்வந்துள்ளனர். இப்போதாவது இவர்களுக்கு உண்மை புலப்படுகிறதே என்பதை எண்ணி மகிழ்கிறோம்.

அன்பர் ஆச்சாரியாரை வடஇந்தியாவில் பல ஊர்களில் பேசவிடாமல் தடுத்துக் குழப்பம் விளைவித்ததைக் கண்டிக்கும் முறையில் 7—4—60-ல் "சுதேசமித்திரன்" ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. அதில்,

இந்திமொழியின் தரம் குறித்தும் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது. அந்தத் தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

"......... ஒரு கட்சித் தலைவர் எந்த ராஜ்யத்தில் பேச வருகிறாரோ, அங்கு அந்த ராஜ்ய மொழியில்தான் பேசலாம் — இல்லையெனில் திரும்பிப் போகவேண்டும் என்றால், நமது அகில இந்தியத் தலைவர்களில் எத்தனை பேர் அத்தகையதொருநிலைமையைச் சமாளிக்கமுடியும்? இந்திய மொழிகள் அனைத்தும் தெரிந்த அகில இந்தியத் தலைவர்கள் அநேகமாகசூன்யம் என்றே சொல்ல வேண்டும். மேற்குறித்த கிளர்ச்சிக்காரர்களின் முறைகள் எல்லா ராஜ்யங்களிலும் கையாளப்படுமாயின்; அகில இந்தியக் கட்சிகள் நீடிப்பதே அசாத்தியமாகிவிடும். நாட்டின் ஒற்றுமைக்கு அதைப்போல் வேடி வைக்கக்கூடியது எதுவுமில்லை. அவ்வொற்றுமையில் அக்கரையுள்ள அகில இந்திய கட்சிகளின் தலைவர்கள் தற்போது தோன்றியுள்ள ஆபத்தை முளையிலேயே கிள்ளியெறிய ஒருமுகமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அது கூடிய விரைவில் தேசிய மொழியாக வேண்டுமென ஆசைப்படலாம். ஆனால் அவ்வாசையை நிறைவேற்ற வழி காண்பதற்கு மேற்குறித்த கூட்டங்களில் கையாளப்பட்டது போன்ற பலவந்தச்செயல்கள் முறையல்ல. உண்மையில் அத்தகைய முறைகள் ஹிந்தி எதிர்ப்பாளருக்கே மேற்கொண்டு ஆக்கமளிக்கும். ஹிந்தி தேசிய மொழியாவதில் அக்கரையுள்ளவர்கள், உண்மையில், அந்த அந்தஸ்துக்கு உரியவாறு அம்மொழியை வளப்படுத்துவதில் முனைவதே பொருத்தம். தற்போதுள்ள நிலையில் ஹிந்தி மற்றச் சில பிரதேச மொழிகள் அடைந்துள்ள வளர்ச்சிகூட அடையவில்லை. சென்னை போன்ற ராஜ்ய அரசாங்கங்கள் பிரதேச மொழியை அரசாங்க மொழியாக்குவதென்று ஏற்கெனவே முடிவுசெய்து, அதை அமுலாக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றன. ஆனால், ஹிந்தி தாய்மொழியாக உள்ள பீகாரில் அது இப்போதும் அரசாங்க மொழியாக்கப்படவில்லை. அதற்கு இன்னும் சமயம் வரவில்லையென்று அந்த ராஜ்யப் பிரதம மந்திரியே பகிரங்கமாகப் பேசியிருக்கிறார். ஹிந்தி இன்னும் போதிய அளவு வளம்பெறவில்லை என்பதே அதன கருத்து. இத்தகைய ஒரு மொழியை யூனியன் மொழியாக்க சட்டமூலம் ஒரு காலக் கெடு குறிப்பது விவேகமன்று. மொழி ஒரு கால அட்டவணைப்படி வளர்க்கக்கூடிய ஒருபயிரல்ல. ஹிந்தி இனி வளம் பெறக்கூடிய நிலையிலும் அது ஒரு யூனியன் மொழியாகவோ, ராஜ்ய அரசாங்கங்களிடை ஒரு பொது மொழியாகவோ ஆவது இப்போதைக்கு சாத்தியமில்லை. இந்தக் கால இடைவெளியைச் சுருக்க ஹிந்தி வெறியர்கள் தற்போது கையாளும் முறை அதை இன்னும் விரிவுபடுத்துவது திண்ணம்."

இந்தி மொழிபற்றி நாம் இருபது ஆண்டுகளுக்கு முன்பே என்ன கூறினோமோ, அதைத்தான் இன்று 'சுதேசமித்திரன்' போன்ற காங்கிரஸ் ஏடுகள் கூறுகின்றன. அன்று பிடிவாதத்தோடு இந்தி மொழியைக் கட்டாயமாகப் புகுத்த முனைந்த ஆச்சாரியாரும் இன்று நாம் சொன்ன காரணங்களையே கூறி இந்தி இந்நாட்டின் பொது மொழியாக எந்தக் காலத்திலும் ஆகமுடியாது என்று அடித்துப் பேசி வருகிறார். இந்த வகையில் ஆச்சாரியாரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போதாவது உண்மையை உணர்ந்தாரே என்று உவகை கொள்கிறோம். அதே சமயத்தில் வடக்கே, வாரணாசியில், பாட்னாவில் அலகாபாத்தில் அவருக்கு ஏற்பட்ட நிலை குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். அவர்களின் வெறியாட்டச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

★

காஞ்சீபுரம்

10 4-60

# தம்பி!

'நெடுநல்வாடை'யில் சிக்கினோர், தென்றல் மீண்டும் ஓர் நாள் கிட்டுமோ என்று ஏங்கிக் கிடப்பர்—நமது நிலை அதுபோன்றதாக இருந்தது. நீண்ட நாட்களாக—சேச்சே! நாட்களா?—நீண்டகாலமாக, நமது தொடர்புக்குத் தனிச் சுவையும தகுதிமிகு பயனும் அளித்து வந்த, 'மடல்' நின்றுபோய் இருந்தது. செய்வதையும் செய்துவிட்டுச் செப்படி வித்தை வேறா? என்று கோபித்துக்கொள்கிறாய்—தெரிகிறது. ஆனால்; நான் என்ன செய்ய? குறைபாடு ஏற்பட்டுவிட்டதற்கு, நானேவா முழுக்க முழக்கப் பொறுப்பாளி? நீயும், உன்போன்ற உடன்பிறந்தார்களும், 'மடல்' எழுத எங்கே, எனக்கு நேரம் தந்தீர்கள்? திங்களில் இருபது நாட்களேனும், நானன்றோ, நீங்கள் இருக்குமிடம் தேடிவந்தேன். காடும் மேடும் கண்டு கலங்கினேனா? அருவிக்கரை ஓரமாயினும் சகதிமிகு இடமெனினும், கொஞ்சிடும் நஞ்சை சூழ் நகராயினும் பஞ்சம் தாக்கிடும் பட்டியெனினும், சகடத்தைச் சாய்த்திடும் குழிகள்மிகு பாழ்வெளியெனினும், புதை மணல் நிரம்பிய புரம் எனினும், உன் அன்பழைப்புப் பெற்றால், தயக்கம் கொள்ளவா முடிகிறது! ஓடோடி வருகிறேன், உன் உள்ளன்பைப் பெற, உற்சாகம் பெற! அண்ணா! இது அறுபத்து எட்டாவது முறை!! இம்முறையும் வாராது இருப்பீரேல்,......! என்று உரிமையுடன, கோபித்துக்கொள்கிறாய். 'பயண அலுப்பு, பாதையில் உடைப்பு' என்று என்ன காரணம் காட்டினால்தான், உன்மனம் திருப்தியா பெறுகிறது! "அதெல்லாம் முடியாது, மாற்றுக் கட்சியினர், மனம்போன போக்கிலே ஏசிவிட்டுச் செல்கின்றனர் — கோபம் கொந்தளிக்கிறது — மக்களுக்கு உடனே வந்து, விளக்கம் தாராதுபோனால், மனம் உடைந்து போகும், மன்றம் கலகலத்துப் போகும், கழகம் கரையும், உலகம் பழிக்கும், என்றெல்லாம், காரணம் காட்டுகிறாய், நீட்டோலை கொண்டு தாக்குகிறாய்! ஆனால், தம்பி, அந்த நீட்டோலைத் தாக்குதலில்தான், நான் எத்துணை இன்பம் காணுகிறேன், தெரியுமா! கழகக் கருத்துக்கள பரவவேண்டும், குறிக்கோளுக்கு வலிவு ஏறவேண்டும், மாற்றார் கட்டிடும மமதைக் கோட்டைகள் மண்மேடாக வேண்டும் என்ற ஆர்வமல்லவா, உன்னை, அவ்விதமெல்லாம், எழுதச் சொல்கிறது. கோபம் கொப்பளிக்கிறதே, நமது நிலை குறித்துத் துளியும் எண்ணிப்பாராமலேயே, இத்துணை வேகம் காட்டுகிறானே தம்பி! என்று, ஒரு கணம் எண்ணுகிறேன், மறுகணமோ, கழக வளர்ச்சியில் உள்ள அக்கறை அல்லவா; இதற்குக் காரணம், இத்தகைய ஆர்வமன்றோ பெறுதற்கரிய கருவூலம், அஃதன்றோ நாம் காண்பது என்றுஎண்ணுகிறேன், உன்னைக்காணப் புறப்படுகிறேன், ஓட்டையோ ஒடிசலோ, சொந்தமோ இரவலோ, எந்த மோட்டார் கிடைத்தாலும். வழி கெடுக்,

## 'நெடுநல்வாடை' நின்ற பிறகு...

அன்பு பொழியும் கண்ணினர், ஆர்வமிகு உரையினர், அஞ்சா நெஞ்சினர், ஆற்றல் மறவர்கள் ஆகியோரைக் கண்டு கண்டு களிப்படைகிறேன்; உன் செயல் திறனின் உருவமாய் அமைத்திடும் மாபெரும் கூட்டத்தைக் காண்கிறேன், மட்டற்ற மகிழ்ச்சியால் உந்தப்பட்டு, ஓராயிரம் சொல்லத் துடிக்கிறேன், ஒருசில மட்டுமே சொல்லுகிறேன், உள்ளம் விரும்பும் அளவுக்குப் பணிபுரியத் தக்க உடல் வளம் இல்லை—அறிந்தே இருக்கிறாய்! எனினும், எனக்குள்ள வலிவிலே செம்பாகம் உனக்கே!, என்பது நீ அறிந்த உண்மை. ஆனால் நீ அறியாதது, என்னையோவெனில், நித்த நித்தம் உன்னைக்காண மெத்தவும் சுற்றிவந்த பிறகு, ஓய்வாக இருக்க, உள்ளத்திலே தோன்றிடும் கருத்துகளை வகைப்படுத்த வரிசைப்படுத்த, வளம்காண, படிக்க, சிந்திக்க, ஆராய, ஐயமகற்றிக்கொள்ள, நேரம் கிடைப்பதில்லை, தம்பி, நேரம் கிடைப்பதில்லை. இந்நிலையில் ஒவ்வோர் கிழமையும், உன்னிடம் உறவாடமடல் தீட்டி மகிழும் வாய்ப்புக் குறைந்தே போய்விட்டது; அடியோடு மறைந்தே போய்விடுமோ என்ற அச்சம்கூட மனதைப் பிய்த்துத் தின்னத் தொடங்கிற்று. எனினும், கூட்டங்கட்கு வரச்சொல்லி; வேலை முடிந்ததும், 'விடை கொடுப்பாய் தம்பி!' என்று நான் கூறிடும்போது, 'மடல்' எழுதுங்கள் அண்ணா! மறவாமல் எழுதுங்கள்! ஏமாற்றாதீர்கள்!—என்று கூறுகிறாய். நான் என்ன செய்ய!! என்ன செய்ய என்று கேட்கிறாய், இதோ இப்போது சொல்கிறீரே, அது தான்—எப்படியாவது நேரம் கண்டுபிடித்து எழுதத்தான் வேண்டும் என்று கட்டளையிடுகிறாய்! சரி! எழுதுகிறேன். ஆனால் இப்போது நேரம் என்ன தெரியுமா தம்பி, ஏதோ அலுப்பு, கோழி கூவவில்லை, ஆனால், நேரம் அதுதான்! இரவு மணி பன்னிரண்டு வரை, கழகத் தோழர்களிடம் பேசிவிட்டுச், சிறிது படித்துவிட்டுப், பிறகு எழுதுகிறேன்.

பொதுக்கூட்டங்களிலேஎடுத்துக்கூறியதுதவிரக் கடித மூலம், என் எண்ணங்களைத் தெரிவித்து நீண்ட காலமாகிவிட்டதால், தம்பி, எதை விடுவது எதைத் தொடுவது என்ற திகைப்பேகூட ஏற்படுகிறது.

எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள், எழுச்சிகள்!

வேலவன் குன்றம் வென்றோம்! இனி மாலவன் குன்றம் வெல்வோம்! என்று இதோ, ம. பொ. சி. குழுவினர், முழக்கமிட்டுச் செல்கின்றனர்.

பிரிட்டிஷ் சிங்கத்தை வென்ற, வீரமிகு தலைவனே வருக! வருக!—என்று எழில்மிகு எகிப்து பெற்ற இணையில்லாத் தலைவனும் நாசருக்கு, வரவேற்பு வழங்குகிறார்கள், ஓர் புறம்.

"எல்லாம் முடிந்துவிட்டது! மாணவர் படை கலைந்துபோய்விட்டது! பொதுமக்களோ, எப்போதோ போய்விட்டார்கள் இவர்களை விட்டு! இப்போது நடிகர்களும் இவர்களை விட்டு விலகிவிட்டார்கள். இனி இதுகளுக்கு நாதியே இல்லை!—என்று நற்றமிழ் நாட்டுக்கு வந்துள்ள புதிய கொற்றவனார் அறிவித்துவிட்டார்.

காமராஜரோ, கழகம் கலையப்போவது உறுதி என்று-ஏதோ கலைப்பதற்கான ஏற்பாட்டினை வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்டவர்போலப் பேசுகிறார்.

அவர் தயவை நாடுவோரோ நரகல் நடையை நாட்டிலே காட்டி, 'ஓட்டு'க் கேட்கின்றனர்.

அடிக்கடி, மாற்றார்கள் கையாண்டு பார்க்கும் முறையான—கழகத்தில் பிளவு—என்று கூறிக் கரடிவிடும் வித்தையையும், கனம்களிலிருந்து வெறும் 'சினம்'கள் வரையில், காட்டி வருகின்றனர்.

எல்லாவற்றையும் கண்டும் கேட்டும், கொள்ள வேண்டியதைக்கொண்டு, தள்ள வேண்டியதைத் தள்ளி, இலட்சியப்பூரி நோக்கி இலட்சக்கணக்கானவர்கள் புடைசூழ, வீரநடைபோட்டு வருகிறாய்! இந்தக் காட்சியைக் கண்டும், கருத்திலே தெளிவு பெறாதார், உளர்! நாடு, முற்றிலும் காட்டுக்குணத்தை விட்டுவிடவில்லை, என்பதற்குச் சான்று வேண்டுமல்லவா—அது இது! சேறு தேடிச் செல்லும் தவளையிடம் செந்தாமரையின் அழகு பற்றி, அகவல் பாடினால் என்ன, வெண்பா பாடினால் என்ன! பலன் உண்டோ! அஃதேபோல, இழுக்கிலே இன்பம் தேடிடும் சழக்கர்கள் நமது கழகத்திலே, பேதம் மூண்டுவிட்டது, பிளவு கண்டுவிட்டது என்று பேசுவது காண்கிறோம். அழுக்குத்தேடி அலைவோருக்கு, கழகத்தின் வளர்ச்சியின் ஒரு கூறுதான், அதனைச் செம்மைப்படுத்த எடுத்துக் கூறப்படும் முறைகள், என்பது எங்ஙனம் புரியும்? சுட்டாலும் வெண்சங்கு நிறம் மாறாது! கழகம் அந்நிலையில் உள்ளது!! அவர்கள் அதனை உணர மறுக்கிறார்கள்; உணரின் மருட்சி ஏற்படும் என்பதால். பொன்னைப் புடத்தில் போடும்போது, ஐயகோ! அநியாயமாக, நெருப்பிலிட்டுவிட்டார்கள்! அரை நொடியில், வெந்து, கருகிச் சாம்பலாகிப் போகும், இந்தக் கட்டித் தங்கம் என்று பேசுவோரை என்னென்று கூறுவது! கட்டித் தங்கத்துக்கு உடையார் அறிவர், அழகுமிகு அணிபணியாக்க, இம்முறை தேவை என்பதை! கட்டித் தங்கமும், எவரிடமிருந்தும் தட்டிப் பறித்துக்கொள்ளப்பட்டதல்ல! பத்தாண்டுகளாகப் பாடுபட்டதிலே கிடைத்தது!

இந்த விளக்கம், அவர்கள் அறியாது போவது ஏனோ என்று கேட்கத்தோன்றும் — எவருக்கும். விளக்கமறியாது பேசுவோரும் உளர் — தெரிந்தும் திரித்துரைப்போர் உளர் — இருசாராருக்கும் ஒரே நோக்கம்—அஃது இதுதான்—அடுத்து வரும் தேர்தலுக்குள் கழகத்தைத் தாக்கித் தாக்கித் தகர்க்க வேண்டும் என்பது. ஆண்டு இரண்டு இருக்கும் போதே, ஆரம்பமாகிறது தேர்தல் பிரசாரம்! பொருள் தெரிகிறதா தம்பி! அவ்வளவு முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, படை அமைத்துக்கொண்டு, பாய்வதற்கான 'கவாத்து' பழகவேண்டி இருக்கிறது, நமது கழகத்தை எதிர்க்க! அந்த அளவுக்குக் கழகத்துக்கு உரம்தேடிக் கொடுத்திருக்கிறாய். கால்கடுக்கச் சுற்றினாய், கண்ணீரைக் காணிக்கையாக்கினாய், "மகனே உடல் துரும்பாக இளைத்துவிட்டதே! சிவந்த மேனியும் கருத்து வருகிறதே! ஏனோ உனக்கு இத்துணை

அலைச்சல்! எந்த இராச்சியத்தைப் பிடிக்க, மகனே! இத்தனை பாடுபடுகிறாய்?'' என்று கனிவுடன் கேட்டிடும் அன்னைக்குப் புன்னகையைப் பதிலாகத் தந்து விட்டுப், பாசறை காணவும் படைக்கலன் சமைக்கவும், போர்முறை பயில்வும், புகழ்க்குறி பெறவும், கிளம்பிடும், உன்போன்ற இலட்சக்கணக்கான காளையரின் கோட்டமாகிவிட்டதால் கழகம், காங்கிரசை இந்த அளவுக்கு முன்னேற்பாடு செய்துபார்க்கும்படி செய்துவிட்டது.

புதுப்புது முறைகளும் புயல்வேகப் பிரசாரமும், நாராசக் குண்டுவீச்சும், நரிக்குண நடவடிக்கைகளும் மேற்கொண்டாகிலும், கழகத்தை எதிர்த்து ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம், காங்கிரசை மதுகுடித்த மந்தியினைத் தேளும் கொட்டிவிட்டால் என்ன நிலைமையோ, அந்த நிலைமைக்குக் கொண்டுபோய்விட்டிருக்கிறது.

கழகத் தோழர்கள் அடிக்கடி கூறுகிறார்கள், காதில் கேட்கச் சகிக்காத பேச்செல்லாம் பேசுகிறார்கள் காங்கிரசார், என்று! தம்பி! அந்த நாராசத்தை அவர்கள் நா தாங்கிக்கொள்கிறதே!—அதை எண்ணிப் பரிதாபப்படு! கோபம்கொள்ளாதே! சத்தியமென்றும் அஹிம்சை என்றும்பேசிடச்சொல்லி உலக உத்தமர் காந்தியார் கூறினார்—இவர்களோ, இன்று இழிமொழியைப் பேசி இன்பம் காணுகிறார்கள்! அந்த அளவுக்குத் தரம்கெட்டுவிட்டதே என்பதை எண்ணி வருத்தப்படவேண்டும்—வரிந்துகட்டிக்கொண்டு வம்புக்குச் செல்லுதல் ஆகாது! நமது மரபும் அஃதல்ல! நமக்குள்ள பணியோ, வேறு — தாங்கிக்கொள்ளும் சக்தியும் வீரமும் இணைந்ததோர் போக்கு வேண்டும்.

தெளிவு—துணிவு—கனிவு—இவைகளில், ஒவ்வொன்றைப் பழுதறப் பெறுவதே கடினம். ஆயின், நமக்கோ இம் மூன்றும் ஒருசேர இருத்தல் வேண்டும்—அஃதே, நாம் மேற்கொண்டுள்ள அறப்போருக்கு, உரிய படைக்கலனாகும். உன் மனதை வாட்டிடும் எந்தப் பிரச்சினையாயினும் சரி, தெளிவு கிடைக்கும் அளவுக்குச் சிந்திக்கவேண்டும்—கசடு அற—தெளிவு கிடைத்ததும், அதனின்றும் எழும் ஓர் உன்னதமான வலிவே, துணிவு ஆகித் துணைநிற்கும்! துணிவு பெற்றதும், ஓர் துடிப்பு உணர்ச்சி இயல்பாக எழும்! அதனைக் கட்டுப்படுத்தவேண்டும். ஏனெனில், தேக்கி வைக்கப்பட்ட மின்சாரமே, பிறகு ஒளிதர, ஒலிதர, விசையாகி நிற்கப் பயன்படும்! அதுபோலவே, தெளிவால் கிடைத்திடும் துணிவு, நமக்காக மட்டுமல்ல, நம்மோடு இருந்துவிட அல்ல, மற்றவர்களுக்கும் கிடைக்க, அளித்திட! அங்ஙனம் மற்றையோர்க்கும் அளித்திட வேண்டுமேல், கனிவு இருத்தல் வேண்டும்! கனிவு என்ற சொல்லிலே, கனிகாண்கிறாய் அல்லவா, தம்பி! சுவை!! ஆம்! இனிமை!!

அந்தக் கனிவு, எந்த இதயத்தையும், தொடவல்லது! நாம் விரும்பி ஏற்றுக்கொண்டுள்ள இலட்சியங்கள், கோடி கோடி இதயங்களிலே, குடி ஏறுவதிலே தானே, வெற்றியே இருக்கிறது! அந்தவெற்றி காணக் கனிவு பெரிதும் வழிகாட்டவல்லது. நான், தம்பி, முன்னது இரண்டினைக்கூட, வேண்டுமளவு பெற்றிடவில்லை என்று கூறிடலாம்—ஆனால் கனிவு என்பதை, நான் போதுமான அளவுக்குப் பெற்றிருக்கிறேன்! மேலும் பெற விரும்புகிறேன்.

என்னை ஊக்குவிப்பதும், பொதுவாழ்விலே எனக்கு உவகை ஏற்படுவதும், அந்தக் 'கனிவு' எனக்குக் கைகொடுத்து உதவுவதால்தான்!

சென்ற கிழமை நமது கழக நண்பரொருவர், மாற்றுக்கட்சி ஏடுகள், நமது மனதுக்குப் பீதியூட்டவே முயலுகின்றன என்பதை மறந்து, அவைகளில் உள்ளவைகளைப் படித்து, மெத்த மனம் நொந்து, என்னிடம் வந்து பேசலானார்.

"அண்ணா!''—என்றார். மேற்கொண்டு பேச முடியாது, என்னையே, உற்றுப்பார்த்தவண்ணம் இருந்தார். பிறகு தழதழத்த குரலில் பேசினார். அவர் பேசுவதற்கு முன்பே, எனக்கு அவர் இருந்தநிலை, அவர் உள்ளத்தைக் காட்டிற்று. உற்சாகப்படுத்த முயன்றேன்.

"அண்ணா! கட்சியிலே, பிளவாமே' என்றார், கேட்டார் என்றுகூட, எழுதவில்லை கவனித்தாயா. தம்பி! அப்படி ஒரு கேள்வி கேட்கக்கூட, அந்த நல்ல உள்ளம் கூசிற்று.

"போபாலில்'' என்று நான் ஆரம்பித்தேன், தம்பிக்கு, என் பேச்சைக்கேட்க விருப்பம் எழவில்லை என்பதை உணர்ந்துகொண்டேன். எனவே, முதலில், அவர் கேட்க விரும்புவதைக் கூறுவதே முறை என்று எண்ணினேன். "தம்பி! கட்சியில் ஒரு பிளவும் இல்லை. பயப்படாதே, கட்சியிலே இன்னின்ன முறைகள் ஏற்பட்டுப் பொலிவும் வலிவும், தரமும் தூய்மையும் வளரவேண்டும் என்று, தம்பி சம்பத் தன் கருத்தைக்கூறி இருப்பது, பிளவுக்கு அறிகுறியுமல்ல, வழியும் ஆகாது'' என்று கூறிவிட்டு, "இனிக் கேள், சேதியை'' என்று துவக்கினேன். ஓரளவு மனநிம்மதி அடைந்த அந்தத் தம்பி,—ஓரளவுதான்—என் பேச்சைக் கேட்கத் தயாரானது தெரிந்தது, பேசினேன்.

"போபாலில், காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில், தலைவர் செயலாளர் முதலிய பதவிகளுக்கான தேர்தல் நடைபெற ஏற்பாடாகி இருந்த கூட்டத்தில், கூச்சலும் கலவரமும் ஏற்பட்டு, அமளிமூண்டுவிட்டது. அமளியை அடக்கப் பார்த்து முடியாது போகவே; தலைவர் தேர்தலைப் பிறகு பார்த்துக் கொள்ளுவோம் என்று கூறிக், கூட்டத்தை ஒத்தி வைத்தார். கூட்டம், கலைந்தது. தம்பி! இந்த நிகழ்ச்சி எந்தக் காங்கிரசில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதோ, அதே காங்கிரஸ்தான் நமது கழகத்திலே பிளவு என்று பேசியும் ஏசியும் வருகிறது. புரிகிறதா நோக்கம்!''—என்று கேட்டேன். அது புரிகிறது, அண்ணா! என்றார் அந்தத் தம்பி.

"இந்தக் கிழமை, தம்பி, நாம், நாடெங்கும், போபால்சம்பவம் குறித்துப் பேசி இருப்போம்—அதைப் பேசவிடாமல் செய்திடக் காங்கிரஸ், கழகத்துக்குள் கலாம் புகுந்துவிட்டது என்று பேசியும் எழுதியும் தந்திரம்செய்கிறார்கள். புரிகிறதா?'' என்றேன்—"ஆமாம்'' என்றார்.

இதேபோலத்தான், எதையும், தெளிவாக்கிக் கொண்டால், நல்லது, என்றேன்.

"கார்ப்பரேஷனில்?"-என்று, இழுத்தாற்போல் பேசலானார், தம்பி!

ரோடு படுமோசம்! சுகாதாரம் மட்டம்! கொசுத் தொல்லை அதிகம்! — ஏன் தம்பி! அதைத்தானே கேட்கிறாய்,என்றேன். சிரிப்பைத், தம்பியால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

"அப்படி எல்லாம் காங்கிரசார், மேடையிலே பேசும்போது, கேட்க, வேதனையாக இருக்கிறதே! ஏன், சென்னை நகரம் அப்படி இருக்கவேண்டும்? சரியாக வைத்துக்கொள்ளக்கூடாதா? நமது நிர்வாகத் திறமையைக்கண்டு பலரும் பாராட்டவேண்டாமா?" என்று கேட்டார்.

"ஆமாம், தம்பி! ஆனால்......" என்று நான் பதில் கூறத்தொடங்கினேன், தம்பி, விடவில்லை, "பணம் இல்லை—சர்க்கார் கொடுக்கவில்லை—என்று காரணம்—சமாதானம் கூறுவீர்கள். கூறுகிறார்கள் நமது தோழர்கள்...ஆனாலும்..." என்றார்.

"உனக்குத் திருப்தி இல்லை! அது தானே!" என்று கேட்டேன். பார்வையால் பதிலளித்தான், பாசம் நிறைந்த தம்பி!

"சென்னை நகரப் பாதைகளைச் சீராகவைத்திருக்கப் போதுமான அளவுக்குப் பணவசதி தேடித்தர, துரைத்தனம் முன்வரவில்லை. அதனால்தான், சில சீர்கேடுகள் உள்ளன. தம்பி! சில வினாடி, கேள்—இது விஷயமாகப் படித்துக் காட்டுகிறேன்—என்று கூறிவிட்டு, ஏடொன்றை எடுத்துப் படித்துக்காட்டினேன். அது இது.

"சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் இந்த ஆண்டு போட்டிருக்கக்கூடியது ஒரு பற்றுக்குறை பட்ஜட், கிடைக்கக்கூடிய பணம் போதாதநிலை இருக்கிறது. போதாத நிலை இருந்தும், இப்போது கொடுக்கவேண்டிய தொகையில் கருணைகாட்டிக் கொடுக்காவிட்டால், நகரசபையின் கதி என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமது மாநிலத்திற்குத் தலைநகரம் சென்னை. அந்நியர்கள் இங்கே வரும்போது நாம் அடைந்திருக்கிற பல முன்னேற்றங்களைக் காட்டிப் பெருமைப்படுகிறோம். அவர்களைச் சென்னை நகர வீதிகளில் அழைத்துக்கொண்டு போகிறபோது, போகிற ஊர்வீதியிலுள்ள குண்டுகுழிகளில் விழுந்து உள்ளே இருப்பவர்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டு போகுமானால், அவர்கள் நாம் அடைந்திருக்கிறமுன்னேற்றத்தைப்பற்றி மறந்து, ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கிறதே என்று வெளியே சொல்லாவிட்டாலும் கூட நினைத்துக்கொண்டு போவர்.

சென்னை நகரத்துக்கு இன்னொரு சாபம், இங்கே ஓடுகிற பஸ்களை அரசாங்கம் நடத்துகிறது. மோட்டார் வெகிகில்ஸ் டாக்ஸ்சேஷன் இருப்பதால், இந்தப்பஸ்களைத்தனியார் நடத்திவந்தால், அவர்களிடம் வரிப்பணத்தை வாங்குவோம். பஸ்களைத் தேசிய மயமாக ஆக்கியிருப்பதால், இதிலே வரிப்பணத்தை நகராண்மைக் கழகத்திற்குக் கொடுக்காமல், வீதிகளை மட்டும், நன்றாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், எப்படி முடியும்! இப்படி, மோட்டார் வெகிகில்ஸ் டாக்சேஷனில் எங்களுக்குக் கிடைக்கவேண்டியது 67-இலட்சம், ஆனால் கிடைப்பது 5-இலட்ச ரூபாய்.

அவர்கள் கொடுக்கக் கூடிய பணத்தைக்கொண்டு நகரிலுள்ள எல்லாச் சாலைகளையும் எப்படிப் பராமரிக்க முடியும்? அப்படிப் பராமரிக்க முடியவில்லை என்றால் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ளட்டும்; வாங்குவது நகரசபைதானே, நமக்கு என்ன என்ற முறையில் இருக்கிறார்கள். இதைப்பற்றிப் பல ஆண்டுகளாக, நகராட்சி மன்ற அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியும், அங்கத்தினர்கள் தூதுக்குழு அமைந்து அமைச்சரைக்கண்டு, அதிகமாக ஒதுக்குங்கள் என்று கேட்டபோதிலும், அதைப்பற்றிக் காதிலேயே வாங்கிக்கொள்ளாமல், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, மாற்றாந்தாய் குணத்தை ஏன் எங்களுக்குக் காட்டுகிறீர்கள் என்று நான் கேட்கிறேன்.

படித்து முடித்ததும், "எப்படி, தம்பி?" என்று கேட்டேன். காரணம் காட்டுகிறார்கள், நமது தோழர்கள். ஆனால், காங்கிரசார், இந்தக் காரணத்தை எல்லாம் ஒத்துக்கொள்ளமாட்டார்களே" என்றார். "அவர்கள் போக்குக் கிடக்கட்டும், சொல்லப்பட்ட காரணம், சரியானதுதான் என்று உனக்குப்படுகிறது அல்லவா?" என்று கேட்டேன், "ஆம்" என்றார்.

எங்களுக்குச் சேரவேண்டிய பணத்தை நீங்கள் கொடுக்கவில்லை.

ரோடுகளை ஏன் சரியாகப் பராமரிக்கவில்லை என்று எங்களை, நீங்கள், கேட்கிறீர்கள்.

எங்களை, நீங்கள் மாற்றாந்தாய் மனப்போக்கில் நடத்துகிறீர்கள்.

எங்களை, நீங்கள் ஏன் இப்படி நடத்துகிறீர்கள் என்று நான் கேட்கிறேன்.

தம்பி! எங்கள் — நீங்கள் — என்றால் தெரிகிறதல்லவா? என்று கேட்டேன். என்னண்ணா இது! தொடக்கப்பள்ளி நடத்துகிறீர்! எங்கள் என்றால் கழகம், நீங்கள் என்பது, காங்கிரசை; இதற்குக்கூடவா விளக்கம் வேண்டும் என்று, தம்பி கேட்டார்.

தம்பி! தெளிவு வேண்டும் என்றேனல்லவா? கேள்! எங்களுக்கு என்பது கழகம் என்ற பொருள் தரச் சொல்லப்படுவது அல்ல — கார்ப்பரேஷனுக்கு என்பது பொருள்! அதுபோலவே, நீங்கள் என்று குறிப்பிடப்படுவது, சர்க்காரை!

கார்ப்பரேஷனுக்குத் தரவேண்டிய பணத்தைக் கொடுக்காமல், சாலை சரியாக இல்லை என்று மாநில சர்க்கார் கண்டிக்கிறதே, சரியா முறையா என்று கேட்கிறார். என்றேன். ஆமாம், புரிகிறது, என்றார் தம்பி! யார் கேட்கிறார்? என்று கேட்டேன். கார்ப்ப

ரேஷன் கவுன்சிலராக உள்ள நமது கழகத் தோழர் என்று, தம்பி பெருமிதத்துடன் கூறிடவே, நான் சிரித்துவிட்டு, "தம்பி! தம்பி! கார்ப்பரேஷன் சார்பாக வாதாடி, சென்னை மாநில துரைத்தனத்தைச் சாடி, நான் கேட்கிறேன் என்று உரிமையோடு கேட்டவர், நமது சழகத்தோழர் அல்ல'—என்றேன்—தம்பிக்குச் சிறிதளவு திகைப்பு ஏற்பட்டது.

"காரசாரமாகப் பேசியவர், காங்கிரஸ்காரர், தம்பி! ஆமாம், திகைக்காதே"—என்றேன்.

"காங்கிரசாரே காங்கிரஸ் கட்சி நடத்தும் சென்னைத் துரைத்தனத்தின் போக்கைக் கண்டித்தாரா?" என்று கேட்டார், தம்பி.

"நேர்மையையும் அஞ்சாமையையும் பாராட்டுகிறாய் அல்லவா?" என்று நான் கேட்டேன்.

"எப்படிக் கேட்கத் துணிந்தார்?" என்று தம்பி கேட்க, "நியாயமான கேள்விதான் தம்பி! ஏன் கேட்டார் என்றால், அவர் ஒரு காங்கிரசார் மட்டுமல்ல, கார்ப்பரேஷனில் அக்கரை கொண்டவர். யார், சொல்லட்டுமா? திருமதி அனந்தநாயகி அம்மையாரின் திருவாசகம் தம்பி!' என்றேன், தம்பி, உண்மையிலேயே திணறிப்போனது தெரிந்தது.

நான் கேட்கிறேன்' மாற்றாந்தாய் மனப்போக்கிலே நடக்கிறீர்கள்—என்றெல்லாம், அடித்துப் பேசியவர், அனந்தநாயகி அம்மையேதான்!! கார்ப்பரேஷனில் பேசவில்லை! கடைவீதிக் கூட்டத்திலும் அல்ல!! அங்குதான் நாம் கிடைக்கிறோமே, கரும்புபோல!! அம்மையார், பேசியது, சென்னை சட்டசபையில், மார்ச் 25-ம் நாள், 1959-ம் ஆண்டு; அதாவது கார்ப்பரேஷனில் கழகத்தவர், மேயராகா முன்பு!!

அப்போது, அந்தப் பேச்சு, நேர்மைக்கு எடுத்துக் காட்டாக, நாணயத்துக்கு உதாரணமாக, அஞ்சாமைக்கும் அறிவுடைமைக்கும் சான்றாக இருந்தது!! அப்போது கார்ப்பரேஷனில் காங்கிரஸ் கட்சி அரசோச்சி வந்தது. ஆகவே துரைத்தனத்தைத் தட்டிக்கேட்க, முன்வந்தார்.

இப்போது, ஆண்டு பல அல்ல, திங்கள் சில ஆயின, கார்ப்பரேஷனில் கழகம் நிர்வாகம் நடத்தத் தொடங்கி.

இப்போது, அம்மையாரின் அருமருந்தன்ன கட்சியினர், ஐயயோ! சாலைமோசம்! கொசுக்கடி அதிகம்! நாற்றம் தாங்கமுடியவில்லை! என்று, அருவருப்பைக் கொட்டுகிறார்கள், மனக்கசப்பைக் கக்குகிறார்கள். "ஐயன்மீர்! மோட்டார் வரியிலே, கார்ப்பரேஷனுக்கு உரிய பங்கு கொடுக்காமல், உருட்டி மிரட்டிப் பார்க்கிறீர்களே, சரியா, முறையா, என்று நமது கழகத்தவர் கேட்டால், காங்கிரஸ் கண்ணியவான்களுக்கு, முகம் கடுகடுப்பாகிறது, வார்த்தைகளிலே தீ பறக்கிறது, "உள்ளவர்களுக்கு" மீசை துடிக்கிறது!!


நான் சொன்னதைக் கேட்ட, தம்பி, பதறி எழுந்து "அண்ணா! முதலில் இதைப்போய், நான், நமது நண்பர்களுக்கெல்லாம் கூறிவிட்டுத்தான் மறுவேலை" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

தம்பி! உன் உள்ளத்திலும், காங்கிரசார் கதைத்திடுவது கேட்டு, கோபமோ, வருத்தமோ, ஏற்பட்டால், ஆர அமர எண்ணிப்பார், உண்மை விளங்கும். அப்படி எண்ணிப்பார்த்துப் பார்த்துத்தானே ஓர் தெளிவான திட்டத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

கட்சிக்கான முறைகள், திட்டங்கள் என்னென்ன மாற்றம் பெற்றாலும், கழகக் குறிக்கோளில் உயிரோட்டம் உள்ளவரையில், காப்பாற்றப்படும் வரையில், எந்தக் கெடுதியையும் விளைவித்துவிடாது, என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. அந்த நம்பிக்கையை நான் பெறுவது, உன் கண்ணொளிகாட்டிடும் ஆர்வத்தைக் காண்பதாலும், கனிமொழிகேட்டு இன்புறுவதாலும். சிலகாலம் தொடர்பற்று இருந்தால் கஷ்டமும் நஷ்டமும், உனக்கல்ல, தம்பி; எனக்குத்தான். இனி, அந்நிலை ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள முடிவெடுத்திருக்கிறேன். உன் ஒத்துழைப்பும் வேண்டுமே! கிடைக்குமா?

அண்ணன்,

அண்ணாதுரை



ஓரங்கநாடகம்:

# ஜோன் ஆப் ஆர்க்

அ. விசுவநாதன்

[ஒலிபெருக்கி:- பதினைந்தாம் நூற்றுண்டின் முற்பகுதி. பகட்டு நாகரிகத்தின் உச்சியிலே உறைகின்றோம் என்று பறை சாற்றுவதையே தொழிலாகக்கொண்ட பாரின் மேலைப் பாதி!... அழகிற்கும் ஆடம்பரத்திற்கும், பணத்திற்கும் படாடோபத்திற்கும் பெயர் பெற்ற பிரெஞ்சு நாடு...மதுவைத் தண்ணீராகவும், மாதை மதுவாகவும் பயன்படுத்தி, பூவுலகிலே பேரழகு நகரமாக விளங்கிய பாரிஸ் பட்டணம்... அதன் ஆட்சிஉரிமையைப் போரிலே தோற்று, ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட்டு சினன் என்னும் நகரிலே அஞ்ஞாத வாசம் புரிந்தான் சார்லஸ் மன்னன்!... முடியிழந்த மன்னனுக்கு முடிசூட்டப் புறப்பட்டாள் ஓர் பெண், ஆம் ஓர் சாமானியள்!... பிரெஞ்சு நாட்டின் கொடியைப் பறித்த ஆங்கிலேயர்களிடம் முடியைத் திரும்பக்கொடுங்கள் என்று கெஞ்சவில்லை, அந்தப் பிஞ்சு மொழி!... வாளெடுத்தாள், போர் தொடுத்தாள் வீரம் விளைத்தாள்... அவள்தான் ஜோன் ஆப் ஆர்க்... அதோ ஏறுபோல் வருகிறுளே...]

## காட்சி 1

[வீரர்கள் கூடி நிற்கின்றனர். ஜோன் மேடைப் படிகளில் ஏறி வருகிறுள், மெல்ல.]

கூட்டத்தினர்:- (மெல்ல) ஜோன், ஜோன்!!

ஜோன்:- (மேடையில் நின்று வீரர் கூட்டத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்து) பிரெஞ்சு நாட்டுப் பெரும்படை வீரர்களே! திருநாட்டின் விலங்கை ஒடிக்கத் துடிக்கும் தடந்தோள்களே! அடிமைப்பட்ட நாடு தன்னைக் காக்க உங்களை அழைக்கிறது! தங்கப் பிரெஞ்சு நாடு தன் தளையைத் துண்டிக்க உங்களை அழைக்கிறது!! தாழ்ந்த நம் சொந்த மண் தன்மானத்தைக் காக்க உங்களை அழைக்கிறது... நீங்கள் தயார்தானே?

வீரர் கூட்டம்:- தயார்! தயார்!!

ஜோன்:- மகிழ்ச்சி! மகிழ்ச்சி!!...... நான் அரங்கமேறிப் பேசவந்த போது அங்கங்கே சிலர் மெல்லப் பேசுவதைக் கேட்டேன்!... ஏதடா, அடுப்பங்கரைப் பெண் துடுப்பாக வந்துவிட்டாளே போர் தொடுக்க, என்று சிலரும், ஆணுடை தரித்துவிட்டால் போதுமா, பெண் ஆணுகிவிடுவாளா என்று பலரும் பேசி இருக்கலாம்; பேசினர். ...நான் கேட்டும் இருக்கலாம்; கேட்டேன்!

உயிரைப்போல் மதிக்கும் என் உடன் பிறந்தோரே!...நான் ஆண் உடை உடுத்திமட்டும் வரவில்லை தோழர்களே, ஆண் வீரத்தோடும் வந்து நிற்கிறேன்! ...திண்தோள் மறவர் கூட்டமே! உங்களைப் பெற்று வளர்த்து வீரம் ஊட்டிய தாய்மார்களின் நெஞ்சிலே வீரத்திற்குப் பஞ்சம் மேற்பட்டுவிட்டதா? இல்லை, உங்களைத் தொட்டுத் தூக்கிய கைகளுக்குத்தான் வாளெடுக்கும் சக்தியற்றுவிட்டதா?...... இல்லை, வீரர்களே இல்லை!...

உங்களுக்கு முன்னே உங்கள் தாய்மார்கள் பிறக்கவில்லையா? அதைப்போல் நான் இதோ உங்களுக்கு முன்னே களத்தில் இறங்குகின்றேன்! ஏ, சாவே! நீ ஓடிவிடு! என் வீரர்கள் இதோ என் பின்னே வருகிறார்கள்! அவர்கள் உன்னைச் சாகடித்து விடுவார்கள்! என்னோடு வாருங்கள், வீரர்களே, வாருங்கள்!... வாழுங்கள் வீரர்களே, வாழுங்கள்! ஒன்று, மானத்தோடு, இல்லை, மண்ணோடு! ஆ!... களத்தில் குதியுங்கள்! அதுதான் உண்மை வீரர்க்குச் சந்தனக் குளம்!...... (ஜோன் மேடையினின்று குதித்துப் போருக்குச் செல்கிறாள்)... போர்! போர்! விடுதலைப் போர்!...

(திரை)

## காட்சி 2

[நிழற்காட்சியில் ஆங்கிலப் படைக்கும், பிரெஞ்சுப் படைக்கும் போர் நடக்கிறது. வெற்றி ஜோன் தலைமை தாங்கும் பிரெஞ்சுப் படைக்கு.]

(திரை)

## காட்சி 3

[அரச அவை. சார்லஸ் மன்னன் முடிசூட்டிக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறான். முடிசூட்டு விழா நடத்தும் மதகுரு தன் வேலைகளில் ஈடுபட்

டிருக்கிறார். ஜோன் அமைதியாக அமர்ந்திருக்கிறாள்.]

மதகுரு:- இழந்த இன்பம் மீண்டும் கிடைத்திருக்கிறது, கர்த்தர் அருளால்! இந்த மணிமுடியை மாமன்னன் சார்லசுக்கு மனம் வாழ்த்திச் சூட்டுகிறேன். (முடி சூட்டுகிறார்.)

[சார்லஸ் மன்னன் குனிந்து முடியை ஏற்றுக்கொள்கிறான்.]

சார்லஸ்:- பிரெஞ்சுநாட்டுப் பெருங்குடி மக்களே! பேரறிஞர்களே!! அமைச்சர்களே! அருமை ஜோன் அவர்களே! போர் வீரர்களே! எனது முடி, முடியைத் தாங்கும் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் என் இதயம் இன்பத்தைத் தாங்குகிறது! இந்த ஒரு இன்ப நிலைக்கு என்னைக்கொண்டு வந்த உங்கள் அனைவருக்கும் என் நன்றி வணக்கம்.

மக்கள் எவ்வழி, மன்னன் அவ்வழி என்று நான் தொண்டாற்றுவேன், இது உறுதி!

இந்த உவகை குதிக்கும் நேரத்தில், இத்தனைக்கும்காரணமான வீரர்கள் போற்றும் வீராங்கனையாம் சிறப்பு மிகு ஜோனைப் பற்றி நான் பேசாமல் விட்டால் தான் தகுமா?... இல்லை, அவர்களைப் பற்றிப் பேசத்தான் நான் தகுதியா?... நமக்கு நல்வாழ்வைத் தந்த ஜோன்...

கூட்டத்தினர்:- வாழ்க!...... பெருமன்னன் சார்லஸ் வாழ்க!

[வாழ்த்து நடனம் நடக்கிறது. விழா இனிது முடிகிறது.]

(திரை)

## காட்சி 4

[அரண்மனையில் ஒருபுறம். சார்லஸ் மன்னன் அமர்ந்திருக்கிறான், அமைச்சர்கள் தளபதிகள் புடைசூழ ஜோன் உள்ளே நுழைகிறாள்.]

ஜோன்:- வணக்கம், அரசே! வணக்கம், ஏனையோரே! (வணங்குகிறாள்.)

சார்லஸ்:- (வணங்கி) இருக்கையில் அமருங்கள், ஜோன்!

ஜோன்:- நான் உங்களிடை விடைபெற்றுச் செல்லத்தான் வந்தேன், அரசே!... நான் என்னுடைய சொந்த ஊருக்குப் போக எண்ணியுள்ளேன்...

சார்லஸ்:- என்ன ஜோன், இப்படிச் சொல்லிவிட்டீர்கள்? உங்கள் சொல் என்னை அதிர்ச்சிக்குட்படுத்துகிறதே! அதற்குள்ளேயா திரும்ப எண்ணுகிறீர்கள்? இப்போதுதான் முடிசூட்டு விழா நடந்துஇருக்கின்றது. ஆங்கிலப் படைகளைப் பல முனைகளில் வெற்றி கண்டு இருக்கின்றோமே, தவிர, அவைகள் நிரந்தரமாக நம் எல்லையைத் தாண்டிய பாடில்லை... அப்படித்தான் ஊருக்குப்போய் என்ன செய்யப் போகின்றீர்கள்?

ஜோன்:- என்ன செய்வேன்?...... ஏதோ ஒரு தொழில்!... ஏன், என் பழைய தொழிலான ஆடு, மாடு மேய்க்கும் தொழிலை மேற்கொள்வேன்... (எல்லாரும் சிரிக்கிறார்கள்) ஏன், அரசே ஏன், அமைச்சர்களே, இது என்ன சிரிப்பு!... ஆடு மாடுகளை ஓட்டும் சாட்டையைப் பிடித்த இந்தக் கைதான் வாளேந்தி ஆங்கிலேயர்களை விரட்டியது. வாளேந்தி ஆங்கிலேயர்களை விரட்டிய இந்தக் கைதான் சாட்டை பிடித்து ஆடு, மாடுகளை ஓட்டப்போகிறது...

சார்லஸ்:- அதற்குச் சொல்லவில்லை, ஜோன்! ஆடுமாடுகள் மேய்க்க ஆயிரமாயிரம்பேர் தயாராக உள்ளனரே! ஆனால், ஆங்கிலேயர்களை வெற்றிகாண நீங்கள் ஒருவர்தானே இருக்கின்றீர்கள்! நீங்கள் அவசியம் இங்கு இருக்கத்தான் வேண்டும்.

ஜோன்:- இல்லை, அரசே, இல்லை! ...நான் வந்தகடமை தங்களுக்கு ரீம்ஸ் நகரில் முடிசூட்டியதோடு முடிந்துவிட்டது.....இறை மனத்தோடு எனக்கு விடைகொடுங்கள்! நான் நன்றியுடையவளாக இருப்பேன்!

அமைச்சர்:- தயவு செய்து மன்னர் சொல்வதைக் கேளுங்கள், ஜோன்!

தளபதி:- ஆமாம், ஜோன்! உங்களது தலைமையில் அசையாத நம்பிக்கை வைத்துத்தானே அரசர் உங்களை இருக்கச் சொல்கிறார், மறுக்கலாமா, நீங்கள்?

அமைச்சர்:- ஆங்கிலப் படை எல்லையில் நிற்கிறது. இன்னொரு முறை படையெடுத்துச் சென்று அவர்களைத் துரத்தத்தான் வேண்டும், ஜோன்!

சார்லஸ்:- உங்களது முடிவு குறித்து மீண்டும் எண்ணுங்கள். ஜோன்!

ஜோன்:- (சற்றுத் தாமதித்து) சரி அரசே!......ஆனால்......சிலமுறை போர் செய்து, ஆங்கிலேயர்களை வெற்றிகண்டவுடனேயே, அவர்கள் என்னைப் பேயென்றும் பிசாசு என்றும், சூனியக்காரி என்றும் சொல்லுகிறார்கள்...... என் உண்மை வீரத்திற்கு உயர்வளிக்காமல் நான் ஏதோ மாய சக்தியின் உதவியால் போரிடுவதாக, அவர்களை வென்று வருவதாக, வதந்தியைக் கிளப்பி விடுகிறார்கள், குணங்கெட்டவர்கள்! ஒரு பெண்ணின் போர்த் திறனைச் சமாளிக்க முடியாத போலிகள்!...உலகத்திலே மனிதன் செயற்கரிய செய்ய முடியாதாம்; கூடாதாம்! அப்படியே செயதுவிட்டால், மனிதன் அதைச் செய்யவில்லை, தனியாக; ஏதோ ஒரு மாய சக்தியின் உதவியால் செய்தான் என்கிறார்கள், இழிந்தவர்கள்! செயற்கரிய செய்பவர்கள்தானே பெரியவர்கள் என்னும் பொய்யாமொழியை மறுக்கிறார்கள், அறிவு குறைந்தவர்கள்!......... அவர்களோடு நான் மீண்டும் மீண்டும் போர் தொடுக்கவேண்டும்!......மன்னர் மன்னா, நான் தயங்குவதற்குக் காரணம், என் வீரம் விலை போய்விட்டது என்றோ, விவேகம் வற்றிவிட்டது என்றோ அல்ல!......இருந்தாலும் உங்கள் சொல்லுக்கு மதிப்பளிக்கிறேன்; போர்முனையில் எதிரிகளை ஒழிக்கிறேன்; இப்போது நான் என் மாளிகைக்குச் செல்கிறேன்... வணக்கம். (ஜோன் செல்கிறாள்)

(திரை)

## காட்சி 5

[நிழற்காட்சி. காம்பேன் நகரில் ஆங்கிலேயர்களுக்கும், ஜோன் தலைமை தாங்கும் பிரெஞ்சுப் படைக்கும்போர். பிரெஞ்சுப் படை தோற்கிறது. ஜோனை ஆங்கிலேயர்கள் சிறைபிடிக்கின்றனர்.]

(திரை)

## காட்சி 6

[ஆங்கில வீரர்கள் சிறை பிடித்த ஜோனை ஆங்கிலத் தளபதி வார்விக் பிரபு முன்கொணர்ந்து நிறுத்துகிறார்கள்]

வார்விக் பிரபு:- (ஜோனை தலையிலிருந்து கால்வரை உற்றுப் பார்த்துவிட்டு) ஓகோ!...இவர்கள்தான் அந்த உலகம் போற்றும் சூனியக்காரி......!

ஜோன்:- (இடைமறித்து) என்று உங்கள் அரைவேக்காடு வீரர்களால் திரித்துக் கூறப்படும் ஜோன் எனும் பெண்!

வார்விக்:- அப்படியென்றால் நீ எனது பெரு மதிப்பிற்குரிய வீரர்கள் கூறுவதுபோல, பேய், பிசாசு, மாயக்காரி, சூனியக்காரி, அது, இது எல்லாம இல்லையா?

ஜோன்:- இல்லை என்று உமக்கு நேரிய முறையில் விடை கூறுவதுகூட, உமது மதிப்பை அதிகப்படுத்தும் என்று நான் எண்ணுகின்றேன்!

வார்விக்:- (கேலியாக) அப்படியென்றால் அவ்வளவு உயர்ந்துவிட்டீர்களோ, நீங்கள்?

ஜோன்:- நான் உயர்ந்துவிடவில்லை; நீங்கள்தான் தாழ்ந்துவிட்டீர்கள்!

வார்விக்:- நாக்கை அடக்கிப்பேசு, ஜோன்!......முன்னம் பல போர்களிலே எங்களை உன் மாயசக்தியால் வெற்றிகண்டு சார்லஸ் மன்னனுக்கு, ரீம்ஸ் நகரிலே முடிசூட்டிவைத்த வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க் என்ற எண்ணமா உனக்கு இன்னும்?...... இப்போது நீ, அறிவுமிக்க ஆங்கிலேயர்களின் அற்பமானகைதி! ......காம்பீன் களத்தில் உன் பேய்த்தனம் கட்டவிழ்ந்து போனதால் வந்தவினை இது... ஜோன், வினை இது!

ஜோன்:- ...பேய்த்தனம், பிசாசுத்தனம்!...ஆணறிஞனாக இருந்து கொண்டு இப்படிச்சொல்லவெட்கமாயில்லை!...பேயாம்! பிசாசாம்! ...நான்மட்டும் உண்மையிலேயே சூனியக்காரியாக இருந்திருந்தால், இன்னுமா விவேகம் கெட்ட உங்கள் முன்னின்று பதில் சொல்லிக்கொண்டிருப்பேன்?......இதிலிருந்தே தெரியவில்லையா, ஜோன் பேயல்ல, ஒரு பெண், மானிடப் பெண், சாமானியள் என்று!

வார்விக்:- (நகைத்து) பாவம்! பரிதாபம்! நான் பேயல்ல, பெண்! பெண்! என்று நீ கத்திக் கத்திக் கதறுகின்ற அளவுக்கு உன்னிலை இழிந்ததாகிவிட்டது!.....ம்...... உனக்காக, நான், மிகவும் வருந்துகிறேன்!.....ஆகையினால் உனக்கு நான் தண்டனை வழங்கப்போவதுமில்லை.....(கைதட்டி) யாரங்கே?

[இரண்டு வீரர்கள் முன் வருகிறார்கள்.]

வார்விக் பிரபு:- இவளை ரூன் நகர கத்தோலிக மதக்குருவிடம் ஒப்படையுங்கள், அரசியல் குற்றவாளியாக அல்ல, மதத் துரோகியாக!

ஜோன்:- ஆ! (அலறி) நான் மதத் துரோகியா?

[ஜோனை இரு வீரர்கள் அழைத்துச் செல்கிறார்கள்.]

வார்விக் பிரபு:- அரசியலில் ஒருவன் தவறிழைத்தான் என்றால், மக்கள், 'என்ன தவறு செய்துவிட்டான்' என்று கேட்டுவிட்டு அவனைச் சித்திரவதைசெய்வார்கள்!... அவனே மதவியலில் தவறிழைத்தான் என்றால், மக்கள் முதலில் அவனைச் சித்ரவதை செய்துவிட்டு, பிறகு 'அவன் என்ன அப்படி மதத்திற்கு ஊறு செய்தான்' என்று கேட்பார்கள்!... ஆகையினால், ஜோனைத் தண்டிப்பதற்கு மதமே ஏற்ற கருவி!... ஆனால், பாவம்! ஜோன், ஒரு பெண், பேதை!...

(திரை)

## காட்சி 7

[ரூன் நகர மத நீதிமன்றம். நீதிபதி இருக்கையில் கௌச்சன்எனும்மதகுரு. ஜோன் விலங்கோடு குற்றவாளிக் கூண்டில் நிற்கிறாள். வழக்கு ஆரம்பமாகிறது.]

நீதிபதி:- மதகுரு உன் மேல் சாட்டிய அறுபது குற்றங்களையும் கேட்டாயா, அம்மா! அவைகட்கு நீ என்ன பதில் கூறப்போகிறாய்?

ஜோன்:- ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்கள் சொல்லவேண்டும் என்ற வழக்கு இருப்பதாலேயே, உண்மையைச் சொல்ல உண்மையைத்தான் திருப்பிச்சொல்லவேண்டும் என்பதும் உண்மையே. இல்லையா, நீதிபதி அவர்களே!... மதகுரு என் மேல் அறுபது நீண்ட குற்றங்களைக் கூறியிருப்பதால், அவைகள் பொய் என்றும் நான் அவற்றை மறுக்க, நான் அக்குற்றங்களைச் செய்யவில்லை' என்ற ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்கின்றேனே, அதனாலேயே நான் உண்மையைத்தான் உரைக்கின்றேன் என்றும் புரியவில்லையா, மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே!

நீதிபதி:- உன்னுடைய பதில் நேரடியாக இருக்கவேண்டும் அம்மா! சுற்றி வளைப்பது வழக்கைக் குழப்பப்படுத்தும்!

மதகுரு:- பெண்ணாகப் பிறந்த நீ ஆணுடை தரித்துத் திரிந்தாய்! இது முதல் குற்றம்; மீண்டும் நினைவுறுத்துகிறேன். இதற்கு உன் நேரடியான பதில் தேவை!

ஜோன்:- ஆடவர்க்கு மீசை வளர்வதும், பெண்டிர்க்கு அது வளராததும் இயற்கை. பெண்ணுக்கும், ஆணைப்போல் மீசை வளர்ந்தால், அதுதான் இயற்கைக்கு மாறான ஒன்றாகும். ஆனால், ஆணைப்போல் பெண் உடை அணிந்தால்அது குற்றமாகாது! அதுவும என்நாட்டின்சுதந்திரத்திற்குப் பாடுபட்ட எனக்கா, கேவலம், உடை விஷயத்தில் சுதந்திரம் இல்லை! எனக்குச் சிரிப்புத்தான வருகிறது!

நீதிபதி:- உன் வாதம் குதர்க்க வாதம்! ஏற்றுக்கொள்ள முடியாதது!

ஜோன்:- நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்எனபதற்காகவே நான் இங்கே வாதாடவில்லை. இங்கே குழுமியிருக்கும் மனிதருள் ஒரே ஒருவராவது என் குற்றமற்ற தன்மையை புரிந்துகொண்டு எனக்காக, நான் அறியாமலேனும் ஒரு சொட்டுக் கண்ணீர் விட மாட்டாரா என்றுதான் நான் பேசுகிறேன்!

நீதிபதி:- நீதிமன்றத்தைஅவமதிக்கிறாய், ஜோன்!

[அடுத்த இதழில் முடியும்.]

2-ம் பக்கத் தொடர்ச்சி

இருந்த செல்வாக்கினால் மட்டுமே புதிய புதிய பாதைகளைப் பல மாகாணங்கள் பெற்றிருக்கின்றன. அதற்கு உதாரணமாக நான்கு எடுத்துக்காட்டுகள் தந்திருக்கிறார் "இந்து" நிருபர்.

ஏற்கெனவே பாதைகள் இருந்தும், அவைகள் இலாபகரமாக இல்லை எனத் தெரிந்தும், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்த பரௌனி—சமஸ்திபூர், பக்தியார்பூர் இராஜ்கிர் என்ற இரு, பாதைத் திட்டங்களை தனக்குள்ள செல்வாக்கால் ஜனாதிபதிவரை சென்று சாதகமாக்கிக்கொண்டதாம் பீகார் மாநிலம். புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கண்ட்லா துறைமுகத்துக்கென ரூ: 12 கோடி செலவில் 134 மைல் நீளத்தில் பெரிய இரயில் பாதை ஒன்றை மூன்றும் திட்டத்தில் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது மத்திய அரசு. 1959-60-ல் 1·1 மில்லியன் டன் பொருள்களை இதன் வழியாக வந்துபோகும் என எதிர்பார்க்கப்படுகிறது அப்படியிருக்கும்போது இவ்வளவு பெரிய அளவில் இரயில்பாதை திட்டத்தின் அவசியம், அரசியல் பின்னணியால் அமைந்ததே தவிர, உண்மையில் பார்க்கும்போது இத்திட்டம் தேவைக்கும் அதிகமானது என்று அரசியல் பெரிய இடங்கள் கருதுவதாக இந்து இதழின் நிருபர் எழுதியிருக்கிறார். பீகார் மாநிலத்தில் இதேபோல் தேவைக்கும் அதிகமாகப் போடப்பட்ட ஒரு இரயில் பாதை, "மந்திரிகளுக்கும் மக்கள் சபை உறுப்பினர்க்கும்தான் போக்குவரவுக்கு உபயோகப்படுகிறதே தவிர, வேறு எந்த வகையிலும் தேவையாயில்லை" என்பதை அந்தப் பகுதியிலிருந்தே வந்திருக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் விமர்சித்தாராம்.

இப்படி, "தங்கள் பகுதி," என்ற உணர்ச்சியால் தேவையற்ற நிலையில் இருந்தாலும் திட்டத்தைத் திணித்து முன்னேற வைக்கும் போக்குகள் ஒருபுறமிருக்க, வன்மையாகக் கண்டித்தும், வலிமையாகக்கேட்டும் தங்களுக்கெனத் திட்டங்களைப் பெற்றுக்கொண்ட மாநிலங்களும் சில இருக்கின்றன. வழக்கமாகச்சென்னையோ மற்றைய தென் மாநிலங்களோ அந்தப் பட்டியலில் வந்துவிடவில்லை! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாவிட்டாலும் அந்தந்த மாநிலங்களின் இடைவிடா முயற்சியால் கேட்டுப் பெற்றுக்கொண்ட இரயில் பாதைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சந்திரபுரா—ஹநியா | 90 | மைல் |
| பக்தியார்பூர்—இராஜ்கிர் | 33 | ,, |
| டில்டங்கா—ஃபர்ரகா | 27 | ,, |
| கஜுரிகாட்—மால்டா | 23 | ,, |
| குமேட்பூர்—பர்சய் | 18 | ,, |
| இரங்கபுரா—இலக்ஷிமிபூர் | 100 | ,, |
| சாம்பல்பூர்—டிடிலகார் | 114 | ,, |
| பீமல்நார்—கிரிபுரு | 30 | ,, |

மேலும் சில சிறிய பாதைகள்.

வரப்போகும் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வே அபிவிருத்திக்காக 1255 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1200 மைல் நீளம் புதிய இரயில் பாதை போடப்பட இருக்கிறது. இதில் 618 மைல் நீள அளவில் புதிய பாதைகள், இரண்டாம் திட்டம் முடிவுறுந்தருவாயிலிருக்கும் போதே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. மூன்றும் திட்டத்தில் அமைக்கப்படஇருக்கும்பத்துப் புதிய இரயில் பாதைகளில் முக்கியமானவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது!

| | | |
|---|---|---|
| ஜுண்ட்—கண்ட்லா | 146 | மைல் |
| உதய்பூர்—ஹிமத் நகர் | 134 | ,, |
| கூனு—மாக்சே | 134 | ,, |
| இந்துமல் கோட்—கங்கா நகர் | 19 | ,, |

திட்டக் கமிஷன் கூறியிருப்பதற்கொப்பவே, புதிய இரயில் பாதைகள் போடுவது அவசியம் இல்லை என்பதற்கு அடையாளமாக மூன்றும் திட்டத்தில் போட இருக்கும் 1200 மைல் நீள பாதையோடு இரயில்வேத் துறை தன் விருப்பப்படி 228 மைல் நீளமுள்ள மற்றொரு திட்டத்தையும் இணைத்திருக்கிறது.

இவ்வாறாக வட இந்தியாவுக்கு என்றால், திட்டக் கமிஷன் அறிவுரையும் ஒதுக்கித் தள்ளப்படுகிறது; நிதி இல்லை என்ற நிலையும் மாற்றியமைக்கப்படுகிறது; உதவி இல்லை என்ற காரணமும் எழாமல் பார்த்துக்கொள்ளப்படுகிறது. தென்னகத்துக்கு என்றால், திட்டக் கமிஷனால் இத் திட்டம் அங்கீகரிக்கப்படவில்லையே என்கிறார்கள்; போதுமான நிதி இல்லையே என்று சொல்லுகிறார்கள்; அந்நிய உதவி கிடைத்தால் பார்க்கலாம் என்று தட்டிக் கழிக்கிறார்கள். மத்திய ஆட்சியின் எந்தத் துறையிலிருந்தும் தென்னகத்துக்குக் கிடைக்கும் பதில் இதுதான். இல்லையென்றால், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இப்போது தயாரித்துக் கொண்டிருக்கும் மூன்றும் திட்டத்திலும், இதுவரையில் விந்தியத்துக்குத் தெற்கே தென்னகம் முழுமைக்கும் ஒரே ஒரு இரயில் பாதைத் திட்டம் மட்டுமே கிடைத்திருக்குமா? (கொல்லம் — எர்ணாகுளம்)

ஒரு எஸ்.வி. இராமசாமி இல்லாமலேயே தனது தேவைக்கும் அதிகமாகத் திட்டங்களைப் பெற்று அஜீரணித்துக் கொண்டிருக்கிறது வடக்கு. ஒரு எஸ். வி. இராமசாமியைப் பெற்றிருந்தும், அடிப்படைத் தேவைக்கே திட்டங்களைப் பெறாமல் பசித்த நிலையில் இருக்கிறது தெற்கு. நாம் செய்த தேர்தல் வினைப்பயன் நம்மைப் பிரதிபலிக்கும் அமைச்சரும் கோவில் பிரசாத சர்ச்சையில் செலவிடும் நேரத்தைக் கூட அபிவிருத்திட்டத் திட்டத்


## விற்பனையாளர்கள் கவனத்திற்கு

○○○○○

விற்பனையாளர்கள்; தங்களுக்குத் தேவைப்படும் இதழ்களின் எண்ணிக்கை விபரத்தை ஒவ்வொரு கிழமையும் புதன் கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

தில் செலவிட விருப்பமில்லாதவர் போல இருக்கிறார்.

அது அவர் குற்றமல்ல. ஏனெனில் அவர் சென்றிருப்பது—காங்கிரசுக்காரர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் மொழியில் கூற வேண்டுமானால்—ஒரு ''செல்வாக்'' இல்லாத மாநிலத்திலிருந்து சென்னையும் மற்ற மாநிலங்களும் செல்வாக்கில்லாமல் இருப்பதற்குக் காரணம் தென்னகம் வடக்கின் ஒரு அங்கமல்ல; ஒட்டப்பட்ட வேறொரு பகுதி. சுருக்கமாகக் கூறினால் தென்னகத்துக்கு, வெகு தூரம் டில்லி.

கட்சிக் கட்டுப்பாட்டில் ஆட்சியை இயங்கவைக்கப் பார்க்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள். இந்தக் கட்சிக் கட்டுப்பாடுதான் பொதுமக்களின் தேவையை மத்திய ஆட்சியினரிடம் எழுப்புவதைத் தடுத்து நிறுத்துகிறது என்கிறார் 'இந்து'வின் நிருபர். ஆந்திரமும் கேரளமும், கன்னடமும், தமிழகமும் ஒன்றுபட்டு நின்று மத்திய ஆட்சியை வன்மையாகக் கேட்டுத் திட்டங்களுக்கு உதவி பெறுவதுதான் பொருளாதார புறக்கணிப்பைப் போக்கக்கூடிய ஒரே நல்ல மருந்து என்று முடிவுரை தந்திருக்கிறார் அந்த நிருபர். நான்கு மாநிலங்களும் ஒன்றுபட்டுக் கேட்டு உதவிபெறும் உடனடிப் பலனிலேயே நின்றுவிடுகின்றனர். இந்து நிருபரின் கொள்கைக்கு உடன்படும் அகில இந்திய வாதிகள் ஒன்றுபட்டு வாழ்ந்து முன்னேறும் நீடித்த பலனுக்காக நிற்கிறோம் நாம். இந்த இடத்தில்தான் வேறுபடுகிறோம் அவர்களும் நாமும்.

நான்கு மாநிலங்களும் ஒன்றுபட்டுக் கேட்பது முடிவுரையாக இருக்கிறது அவர்களுக்கு. ஆனால் நமக்கோ அதுதான் முன்னுரை.

நான்கு மாநிலங்களும் ஒன்றுபட்டு மீண்டும் வடக்கினின்றும் தனித்து வாழ்வது தான் நமக்கு முடிவுரையாக அமையும்.

கற்பனையில்.........கருத்துக்கு!

புதிய இரயில் பாதை போடும் பிரச்சினையில் தென்னகத்துக்கு இழைக்கப்பட்டிருக்கும் புறக்கணிப்பைக் கேள்வியுற்ற ஒரு தென் மாநில மந்திரி ஒருவர் மற்றொரு மந்திரியொருவரைப் பார்த்துக் கேட்டாராம்: "ஆமாம், புதிய பாதைகள் ஏதும் போடாமலேயே இரயிலை விடமுடியாதா?"

இரயில் பாதைகள் இன்னும் போடவேண்டும் என்று தப்பித் தவறித் துணிந்துகேட்டுவிட்ட ஒரு தென் மாநில மந்திரியொருவரைப் பார்த்து மத்திய அமைச்சர் ஒருவர் கூறினாராம்: உங்களுக்கெதற்கு மேன்மேலும் 'இரயில் பாதை? டில்லிக்கு அடிக்கடி வந்துபோகத்தான் ஒரு பாதை இருக்கிறதே, போதாதா?" என்று!

*

# சாம்பலிலிருந்து ஒரு நகரம் எழுகிறது!

ஒரு நகரம் பூராவையும் நிர்மூலமாக்கி இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திய சரித்திரச் சிறப்புள்ள ஒரு நிலப் பரப்பைத் தேசப் படத்திலிருந்தே துடைத்தெறிவதற்கு இருபத்தைந்து நிமிஷம்தான் பிடிக்கும் என்று சொன்னால் மிகையாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில், ஜூலிக் என்னும் சிறிய மேற்கு ஜெர்மன் பட்டணத்துக்கு 1944-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ஆம் தேதியன்று இந்தமாதிரி ஒரு கொடிய முடிவுதான் இருபத்தைந்து நிமிஷ நேரத்துக்குள் ஏற்பட்டுவிட்டது. அன்றைய தினம் நடுப்பகல் வாக்கில் வானத்தில் திடீரென்று 600 பெரிய வெடி விமானங்கள் கர்ஜித்துக் கொண்டு வந்து, 2,500 டி. என். டி. குண்டுகளையும், 1800 எரி குண்டுகளையும் அந்தப் பட்டணத்தின்மேல் வீசின. இருபத்தைந்தே நிமிஷத்தில் அந்தப் பட்டணம் ஒரு பெரு நாசக்களமாக மாறியது. அங்கே சேதமடையாமல் மிஞ்சின வீடு ஒன்று கூட இல்லை. எலிகளைத் தவிர, மனிதர் ஒருவர்கூட மிஞ்சவில்லை.

இந்த விமானத் தாக்குதலுக்குப் பிறகு தரைச் சண்டை நடந்தது. அதில் ஜூலிக் பட்டணத்தின் நாசம் பூர்த்தியாயிற்று. இதையடுத்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட நேச இராணுவ அரசாங்கம் ஜூலிக் பட்டணத்தை வேறொரு இடத்தில் மறுபடி நிர்மாணிக்க விரும்பியது. ஆனால் அந்தப் பட்டணத்தைச் சேர்ந்த மக்களில் உயிர் தப்பியவர்களோ, அங்கேயேதான் ஜூலிக் பட்டணம் மறுபடி எழவேண்டும் என்றும், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அந்தப் பட்டணம் உருவாக்கியிருக்கும் உயர் மரபைத் தம்மால் விடமுடியாது என்றும் வற்புறுத்தினார்கள். 1945-ஆம் ஆண்டில் அப்படியே தரைமட்டமாகிக் கிடந்த அந்தப் பட்டணத்தில் அதற்கப்புறம் ஒரே வருஷத்துக்குள் 6,000 பேர் திரும்பி வந்துவிட்டார்கள். மரப் பெட்டிகளை அடுக்கி அறைகள் உண்டாக்கியும், மரக்கட்டைகளால் குடிசைகள் கட்டியும் அவர்கள் அங்கே மறுபடி வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். பசியும், பிணியும் அவர்களைப் பிடித்தது. ஊரைச் சுற்றிலும் ஒரு இடம் விடாமல் பூமிக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் மூலம் பலர் கொல்லப்பட்டார்கள்.

இந்தத் துன்பங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் ஜூலிக் பட்டணத்தின் மக்கள் அந்த ஊரை மறுபடி உருவாக்குவதில் முனைந்தார்கள். முக்கியமான வீதிகளையெல்லாம் சிதைவுகள் போகத் துலக்கினார்கள்; வெடிகுண்டு விழுந்ததால் ஏற்பட்டிருந்த பெரும் பள்ளங்களை இந்தச் சிதைவுகளால் நிரப்பி மூடினார்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாக ஊரின் முதலாவது வீடுகள் மறுபடி தலைதூக்கின. அவை எளிய அமைப்புக்கள்தாம். கட்டிடங்கள் இடிந்து விழுந்து பெருமளவில் கொட்டிக் கிடந்த சிதைவுகளைக் கொண்டே அந்தப் புதிய வீடுகளை அமைத்தார்கள். பெரும்பாலான வீடுகளை அந்த இடத்தில் முன்பு குடியிருந்த குடும்பங்களே மறுபடியும் கட்டிக்கொண்டன.

ஜூலிக் பட்டணம் சர்வநாசமடைந்து பல ஆண்டுகளுக்குப் பின்னரே பெரிய எடுப்பில் சீரமைப்பு வேலை ஆரம்பமாயிற்று. நவீன வர்த்தகக் கட்டிடங்களும், அலுவலகங்களும், பள்ளிக்கூடங்களும், ஆலயங்களும், பொதுக் கட்டிடங்களும் பெருநாசச் சாம்பலிலிருந்து கிளம்பின. ஆலைகள் மீண்டும் அமைக்கப்பட்டன. விசாலமான வீதிகள் தளமிடப்பட்டன. வீடமைப்பில் மட்டும் கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டது, கிட்டத்தட்டப் பழைய எண்ணிக்கையில் வீடுகள் தோன்றிவிட்டன; இன்னும் 1,000-ஜாகைகள்தான் அந்த எண்ணிக்கையில் பாக்கியிருக்கிறது. போருக்கு முன்னர் இருந்த ஜனத்தொகை — அதாவது 12,000—இப்போது அங்கே மறுபடிவந்துவிட்டது. அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வது குறித்து ஆராய்ச்சி நடத்தும் ஒரு கேந்திரமாக அதுஉருவாகிவிட்டது. ஜெர்மனி முழுதிலுமே இப்போது மிகப் புதியபட்டணம் ஜூலித்தான்; இந்தப்பட்டணம் குறித்து ஜூலிக் மக்கள் பெருமிதம் கொள்கிறார்கள். ஃபீனிக்ஸைப்போல மரணச் சாம்பலிலிருந்து ஜூலிக் பட்டணம் எழுந்துவிட்டது; இன்று புது வாழ்வு ஒன்றின் துடிதுடிப்புடன் பிரகாசிக்கிறது ஜூலிக்.

# சரியா? தப்பா?

—[கோவி. கார்முகில்]—

உலகம் இருண்டு கிடந்தாலும் இயற்கை அதன் அழகை அழித்துக்கொள்வதில்லை, தேய்ந்து போகும் நிலவு முழு உருவை அடையாமல் போவதில்லை, இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கையென்று எண்ணினேன். அது கனவாக மாறித், துன்பமே உன் வாழ்வின் அடிப்படை என்று இடித்துக் கூறினால்! அன்றும்—இன்றும், பழகிப்போன வழக்கமாக இருந்தாலும் அன்று பசுமையிலே இருந்தது, இன்று பாழ் வெளியிலே என் வாழ்வு நாதியற்றுக் கிடக்கிறது.

பட்டமரத்திலே எந்தப் பறவை தங்கும்—பாசிபடிந்த நீரை யார் குடிப்பார்கள், அன்றும் இப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். உலகம் அமைதியில் மூழ்கிக் கிடந்தது. தனிக்கட்டையாய் என் அறையில் முடங்கிக் கிடந்தேன். நள்ளிரவில் யாரோ கதவைத் தட்டும் ஓசைகேட்டு ஆச்சரியத்தால் மலைத்துப்போனேன்.

கதவைத்திறந்து வெளியேபார்த்தேன்!

எதிர்வீட்டுக் கமலம் என்னைக் கேட்காமல் உள்ளே வந்து, கதவை மூடிக், கதவின்மேல் பைத்தியம் பிடித்தவள்போல் சாய்ந்துகொண்டாள்.

மெருகு ஏறாத தங்கம் அவள்! ஏழ்மையிலே புரண்டாலும், அவள் அழகு செல்வத்திலே புரள்வதைப் போன்றுதான் காண்பவர் கண்களுக்குத் தெரியும். இளமை துடிக்கும் அவள் உடல்—எழில் பொங்கும் அவள் முகம், களையிழந்து உயிரற்று, நடைப்பிணம் போல் காட்சியளித்தது, எத்தனையோ முறை அவளை நான் பார்த்திருக்கிறேன், என்னை அவளும் பார்த்திருக்கிறாள், களங்கமற்ற பார்வையில். முதலில் நான் தப்புக் கணக்குப் போட்டு அதை மீண்டும் என் இதயத்திலிருந்து பிய்த்துத் தூர வீசிவிட்டேன்.

இன்று,

என்னைத் தேடி வந்திருக்கிறாள்! சிங்காரச் சிரிப்போடு வரவில்லை, "சீரழிந்த என் வாழ்வின் வேதனையைப் பார்!" என்று சொல்வது போல், அவள் முகம் சோர்ந்து கண்களில் தாரைதாரையாக வழிந்தது அவளின் சோகத்துளிகள். பேசாமல் இருந்த கமலத்தை "என்ன வேண்டும்?" என்று கேட்டபோதுதான் தன் உணர்வு வந்தவளைப்போல் என்னை ஏறிட்டுப் பார்த்தாள், அமைதி நிலவியது, திடீரென்று என் கால்களைக் கட்டிக்கொண்டு கதறும் கமலத்தை என்னால் தேற்றவே முடியவில்லை, இளகாத என் உள்ளம்கூட அவளுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் உதிர்த்துவிட்டது. ஆதரவாக அவளைத் தூக்கிப் பிடித்தேன்! "என்ன வேண்டும்"? என்று மீண்டும் கேட்டேன், "வாழ்வு வேண்டும்! என்னை வாழவையுங்கள்" என்று விம்மினாள், எனக்குப் புரியாத புதிராக இருந்தது, "வாழ்வளிக்க என் கையில் ஒன்றுமில்லை, ஏழைகளுக்கு இளகிய இதயம்தான் இருக்கிறது, அதனால் உனக்கு என்ன 'பயன்' என்று கேட்டேன். இதயம்தான் வேண்டுமென்றாள்! — "இரும்புப் பெட்டி எனக்குத் தேவையில்லை" என்றாள். ஆயிரம் ஈட்டிகளைத் தாங்கும் உறுதிபெற்ற என் உள்ளம் ஒரு பெண்ணின் கண்ணீருக்கு இளகிவிட்டது.

நான் ஒரு வாலிபன், அவளும் ஒரு பருவப்பெண், என்னிடம் அவள் எதை எதிர்ப்பார்க்க வேண்டும், எனக்கே புரியவில்லை, கமலம் தொடர்ந்து சொன்னாள்!

"தாங்கள் ஒரு நல்ல உள்ளம் படைத்தவரென்று எனக்குத் தெரியும். அதுவும் தாய்தந்தையற்ற அனாதையென்றும் தெரியும். அனாதையைக் காப்பாற்ற அனாதையால்தான் முடியும். ஏழையின் கண்ணீரை ஏழைதான் புரிந்துகொள்ளமுடியும்; நான் சொல்லுவதைக்கண்டு, என்னை வெறுத்துவிடாதீர்கள், நான் வாழவேண்டுமென்ற நப்பாசையால்தான் தங்களைத் தஞ்சமடைந்தேன்.

என் வாழ்வு பறிபோய்விட்டது நான் வாழத் தகுதி அற்றவளாக ஆக்கப்பட்டுவிட்டேன். தாங்கள் கூடப் பார்த்திருப்பீர்கள் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி ஒரு வாலிபர் வந்து போனதை! பெயர்தான் மாசிலாமணி, அவர் உள்ளம் மாசுபடிந்தது என்று இப்போதுதான் தெரிந்துகொண்டேன்.

ஆரம்பத்தில் ஏழ்மையிலே வாடும் எங்கள் குடும்பத்திற்கு உதவிசெய்து வந்தார். அதற்கு வட்டியாக என் கற்பைச் சூறையாடுவார் என்று எண்ணவே இல்லை. முதலில் அன்பாகப்பேசி என்னை அடிமையாக்கிவிட்டார். அவர் பேச்சிலே மயங்கி நான் அவர் ஆட்டுவிக்கும் பம்பரம் போல் ஆடினேன்.

எனக்கும் அவருக்கும் தனிமையை உண்டாக்கித் தந்துகொண்டிருந்தார், என் தந்தை. அதை அன்று என் பாக்கியம் என்று கருதினேன், இன்று அது என் வாழ்வுக்கே முற்றுப்புள்ளி வைக்கும் என்று எண்ணவே இல்லை.

மனதைத் திறந்து சொல்லுகிறேன், தங்களிடம் சொன்னால் அதைத் தாங்கள் தவறாக எண்ணினாலும், அதை நான் சொல்ல வேண்டும் என்று என் உள்ளம் ஆணையிடுகிறது.

பசித்த புலி, இது மிருக உணவா? மனித உணவா? என்று பார்ப்பதில்லை. மாசிலாமணி ஒரு ஏழையின் கற்பைச் சூறையாடுகிறோமே, இது சரியா? தப்பா? என்று எண்ணவே இல்லை.

"உன்னை மணந்து என் மனைவியாக்கிக் கொள்ளுகிறேன்" என்று ஆணையிட்டவர். ஆயிரமுறை, அன்றெல்லாம் அவர் என் செல்வக் குழந்தையாக என் மடிமீது புரண்டுகொண்டிருந்தார்.

காலம் நடந்தது.

இயற்கை ஏழையாயிற்றேஎன்று கருணை காட்டவில்லை, எங்கள் வாலிப விளையாட்டுகள் எனக்குத் தாய்மையைத் தந்துவிட்டது. ஒரு நாள், நான் அவரிடம் அன்பாகச் சொன்னேன், "நமக்கு மகன் பிறப்பான்" என்று. விரைவிலே திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லிப் போனவர் மாதங்கள் ஐந்தாகியும் இன்னும் ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை. எனக்கு ஆத்திரம் வந்தது, என் அறிவை நொந்துகொண்டேன், முன்பின் தெரியாத ஒருவனிடம் சிக்கிச் சீரழிந்தது உலகத்தின் கண்களுக்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

குத் தெரிந்தால், என்ன நினைக்கு மென்றுகதறியழுதேன், அழுதேன் -தினமும் அழுதுகொண்டே இருந்தேன்.

மாசி ஊரைவிட்டே ஓடிவிட்டார்! இது என் தந்தையின் பதில். ஊரும் உலகமும் வெறுப்போடு என்னைக் கூறுபோட்டுக்கொண்டிருந்தது. தற்கொலை செய்து கொள்ளலாம் என்று எத்தனையோ முறை முயன்றுவிட்டேன். அப்போதெல்லாம் என் தாயும் அன்புத் தந்தையும் கண்முன் நிழற்படமாக ஓடிக்கொண்டிருப்பார்கள்.

வாழவும் விடவில்லை — சாகவும் விடமுடியாது என்று சமுகம் கர்ச்சனை செய்கிறது. ஏதோ ஒரு நப்பாசை, முடிவில் தங்களைச் சந்திக்கச் செய்துவிட்டது, நான் தங்களிடம் வாழ்வுகேட்பது சரியா? தப்பா? என்று என்னால் சிந்திக்க முடியவில்லை. தாங்கள் நான் கேட்டது சரியா? தப்பா? என்று சிந்தித்து விடையளியுங்கள்.''

கமலம்மீண்டும் கதவைத்திறந்து கொண்டு போய்விட்டாள். விளக்கைத் தூண்டிவிட்டுச் சன்னல் வழியாகச் சூனிய உலகை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தேன். களங்கமற்ற முழு நிலவை ஒரு கரு மேகம் மூடிமறைத்துக்கொண்டிருந்தது. என் மனக்கண் முன் மாசிலாமணியும்-அவள் தந்தையும் வந்து போய்க்கொண்டிருந்தனர். நான் சிந்தித்தேன்-சிந்தித்துக்கொண்டே இருந்தேன்.

வறுமையின் கொடுமையால் வாழ வழியற்றகமலத்தின் தந்தை, மாசிலாமணியை நம்பித் தன் பருவ மகளிடம் பழகிவிட்டது சரியா? தப்பா? பூத்த மலரை முகர்ந்து பார்க்காமல், அதைக்கசக்கி எறிந்துவிட்ட மாசிலாமணி மனிதனாக இருப்பது சரியா? தப்பா? கள்ளிப் பாலை, பசும்பால் என்று நினைத்த கமலத்தின் செய்கை சரியா? தப்பா?

சரியா? தப்பா? சரியா? தப்பா?

உள்ளத்திலே ஏற்பட்ட பிதற்றல் கேள்விக்குறி, என் உணர்ச்சியைத் தூண்டி மேலும் மேலும் என் அறிவை குழப்பிக் கொண்டே இருந்தது. சரியா? தப்பா? என்று சிந்தித்து முடிவுக்கு வரும் நிலையில் கமலம் என்னைச் சந்திக்கவரவில்லை. என்னைச்சிந்திக்கச் சொல்லிவிட்டு அவள் சீரழிந்த சோகக் கதையைச் சொல்லி அதைச் செயல்படுத்தி, அவளுக்கு நல்வாழ்வு தரும்படி கெஞ்சிவிட்டுப் போய்விட்டாள்.

நீதிபதியிடம் குற்றவாளி தன் வழக்கை விசாரித்து தீர்ப்பளிக்கச் சொல்லவில்லை, குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறேன், இனிக் குற்றம் புரியமாட்டேன், என்னை வாழ விடுங்கள் என்று கெஞ்சுகிறாள். நீதிக்கும் உள்ளத்திற்கும் நெடுந்தூர இடைவெளி இருக்கிறது. பாழ் நிலமும் பாசிபடிந்த நடை பாதையும், பாம்பும்—தேளும் அந்த இடை வெளியைப் பங்குபோட்டுக் கொண்டிருக்கின்றன.

சிறகொடிந்த பறவை நான்; தங்கள் இதயக் கூண்டிலே என்னை வைத்துக்காப்பாற்றுங்கள், இல்லையென்றால் சமுகத்தின் வல்லூறுகள் என்னை இரையாக்கிக்கொள்ளும் என்று கெஞ்சுகிறாள் கமலம். "சுதந்திரப் பறவை என் மகள், அவள் வாழ்வு என்னும் சிறகை வெட்டிவிட்டான் மாசி. இனி எப்படி என் மகள் வாழ்வாள் என்று கதறுகிறார் கமலத்தின் தகப்பன்.

"பூந்தோட்டத்திலே புகுந்து மதுவைக் குடித்தேன். பூ வாடிவிட்டது. இனி மதுரசம் அவளிடம் இல்லை. மது இருக்கும் பூவை நாடி நான் ஓடியதில் தவறு என்ன? என்று எக்காளமிடுகிறான் மாசிலாமணி.

வாழ்வை அழித்துவிட்ட மாசிலாமணி!

வாழவைக்க எண்ணும் கமலத்தின் தந்தை!

''வாழவையுங்கள்'' என்று கெஞ்சும் கமலம்!

நிழல்தரும் என்று வளர்த்த பசுமரத்தை நீசன் ஒருவன் வெட்டிவிட்டான்! ஏன் வெட்டினாய் என்று கேட்பதைவிட, மொட்டை மரத்தில் இருந்து வரும் துளிரை இனிவெட்டாமல் பாதுகாப்பதுதான் மனிதத்தன்மை. நானும் அப்படித்தான் எண்ணிவிட்டேன். களங்கப்பட்ட கமலத்தை, உன்னை ஏன் களங்கப்படுத்தினான் என்று கேட்கப்போவதில்லை. களங்கமில்லாத முழு நிலவு நீ! என்று அவளைக் காப்பாற்றப்போகிறேன்.

ஊரார் என்னைத் தூற்றினார்கள். சாதியைவிட்டு ஒதுக்கினார்கள். என்னைப்பார்த்து சிரித்தார்கள். எல்லோரும் என்னைப்பார்த்துக் கேட்டனர். 'உன் செய்கை சரியா? நீயும் ஒரு மனிதனா?'' சிலர் என்னிடம் வந்து சொன்னார்கள். நீ செய்தது, தப்பான செய்கை, உலகில் இதை எவனும் ஒப்புக்கொள்ள மாட்டான். நான் ஓடினேன் கமலத்தின் வீட்டை நோக்கி, சரியா? தப்பா? என்ற கேள்விக்குறி என்னைத் தடுத்து நிறுத்தவில்லை. தனிக்கொடியை ஆதரவுதந்து படர வைக்கவேண்டும், என்ற மனிதத்தன்மை என் உள்ளமெல்லாம் நிரம்பி இருந்தது.

ஊரும் உலகமும் ஏசட்டும். சிரிக்கட்டும். பகுத்தறிவு உள்ள என் தோழர்களே! பெரியோர்களே! நான் செய்தது சரியா? தப்பா? சிந்தித்துப் பாருங்கள்.

★


## "நக்கீரன்"

**1—5—60 முதல் வார இதழாக வெளிவருகிறது.**

நல்ல விற்பனையாளர்கள் தேவை

சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஆசிரியர்:

**அ. செல்வராசன்**

விபரங்கட்கு:

"நக்கீரன்" அலுவலகம்.

77, ஜெனரல் பாட்டேர்ஸ் தெரு,

சென்னை-2


காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.